www.padippakam.com

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் தத்துவார்த்த ஏடு

# செம்பதாகை

ஜூலை - செப்றெம்பர் 2012

14

## போரும் அரசியலும்
சி.கா. செந்திவேல்

## மானிட இருப்பை அச்சுறுத்தும் இலாப வேட்கை
பேராசிரியர் சி. தில்லைநாதன்

## ஏகாதிபத்தியத்தின் கருவியாகச் சுயநிர்ணயம்
இமயவரம்பன்

## நண்பர்களும் எதிரிகளும்
தெ.ஞா. மீநிலங்கோ

## கவிதை:
சார்லி சப்லின்

படிப்பகம்

## ஆசிரியர் தலையங்கம்

# அரசும் வன்முறையும்

ஜூன் 29ம் திகதி, வவுனியாச் சிறைச்சாலையில் படையினர் மேற்கொண்ட கோரத் தாக்குதலின் விளைவாகப் படுகாமடைந்த தமிழ் அரசியல் கைதிகளை மகர சிறைச்சாலைக்கு மாற்றிய பின்பு, அங்கும் அவர்கள் தாக்கப்பட்டனர். அதனால் மோசமாகக் காயமடைந்த இளைஞர் கணேசன் நிமலரூபன் ஜூலை 4 அன்று உயிரிழந்தார். இக் கொடூரத் தாக்குதலையும் படுகொலையையும் மிலேச்சத்தனமான பேரினவாத பாசிச வன்முறையெனப் புதிய ஜனநாயகக் கட்சி வன்மையாகக் கண்டித்திருந்தது.

ஒரு குற்றச்சாட்டுமின்றித் தடுப்பிலிருந்த நிமலரூபனின் சடலத்தைப் பெற்றோரிடம் ஒப்படைக்க மறுத்ததன்மூலம் சிறை அதிகாரிகள் அந்த அப்பாவி இளைஞரைக் கேவலப்படுத்தியிருந்தனர். இவ்வாறான இராணுவ வன்முறையும் அதிகாரிகளின் பேரினவாதத் திமிரும், அரசியற் கைதிகளை விசாரணை இன்றி நெடுங்காலமாகத் தடுத்துவைத்து வருவதன் விளைவே என்பதில் ஐயமில்லை.

ஆண்டுக்கணக்காக விசாரணையின்றி மறியலிலுள்ளோரை விடுவிக்கக் கோரும் அழுத்தப் போராட்டங்கள் பல, சிறைகட்கு உள்ளேயும் வெளியேயும் நடந்தும் ஆட்சியாளர்கள் அவற்றில் எதையும் கவனித்ததாகத் தெரியவில்லை. மாறாகத் தமிழ் அரசியல் கைதிகள் மீதான சிறைக்கூட வன்முறையும் பேரினவாத ஒடுக்குதலும் வலுத்துள்ளன. எனவே, வவுனியாச் சிறைச்சாலைத் தாக்குதல், தவிர்க்கவியலாது, 1983ன் வெலிக்கடைப் படுகொலைகளையும் 2000ன் பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலைகளையும் களுத்துறைச் சிறைச்சாலைத் தாக்குதல்களையும் பூசாச் சித்திரவதைகளையும் நினைவூட்டுகிறது.

இம் மிலேச்சத்தனமான தாக்குதலும் மிருகத்தனமான படுகொலையும் ஆட்சித் தலைவர்களைத் தலைகுனிய வைத்துள்ளது. ஆனால் அவர்கள் அதிலிருந்து எதையும் கற்பது ஐயத்துக்குரியது. கற்கக்கூடியோராயின் இக் கொடிய சம்பவத்திற்குப் பின்பாவது அனைத்து அரசியல் கைதிகளையும் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்க முன்வந்திருப்பர்.

சிறைக்கூட வன்முறைகளும் கொலைகளும் என்றென்றைக்கும் ஒரு சமூகத்தை மட்டும் இலக்குவைக்கத் தேவை இல்லை என்பதை 1988-89 காலத்தில் ஜே.வி.பி. தலைமை உறுப்பினர்கள் அறிந்திருப்பார்கள். அரச அடக்குமுறைச் சட்டங்களின் துணையுடனும் அவற்றின் துணையின்றியும் நடக்கும் அரச வன்முறைக் கொடுமைகள் பேரினவாதத்தைச் சுட்டி நின்றாலும், அவற்றின் அதிகார வர்க்க இயல்பு, அவற்றை அந்த எல்லையுள் நிறுத்துவதில்லை. எப்போதேன் ஆளும் வர்க்க அதிகாரத்துக்குச் சவால் விடுக்கும் முறையில் மக்களில் எப் பகுதியினரேனும் கிளர்ந்தால் அரச வன்முறை இன வேறுபாடின்றிக் கட்டவிழ்த்துவிடப்படும்.

யூ.என்.பியின் தலைமையில் ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் காப்பாற்ற ஒரு இயக்கம் தோன்றியுள்ளது. அது வினோதமான ஒரு கூட்டணி என்பதுடன், நாட்டின் ஒரு வகையான எதேச்சாதிகாரத்தை எதிர்ப்பதற்கும் மேல் உயரிய நோக்கம் வேறு அதற்கு இருப்பது ஐயத்துக்குரியது. ஏனெனின் தேசிய இனப் பிரச்சனையயைப் பற்றியும் அடிப்படையான மனித உரிமை மீறல்களைப் பற்றியும் அதன் பார்வை ஐயமானது. யூ.என்.பி. மெய்யாகவே ஜனநாயகத்தைக் காக்க விரும்பின் நல்லது. ஆனால் அது முதலில் தனது ஜனநாயக விரோதக் கடந்தகாலத்தை நேர்மையாக விளக்கி விமர்சிக்குமா? மகிந்த சிந்தனை அரசாங்கம் வேறுவழியின்றி அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் பணிகிறது என்றால், அதனிடத்தில், யூ.என்.பி. ஆட்சி வந்தால் அது மனம் விரும்பிப் பணியும் என்பதை விட அதிகம் வேறுபாடு இராது. தனியார் மயமாக்கலோ திறந்த பொருளாதாரமோ சர்வதேச நணய நிதியமும் உலக வங்கியும் விதித்தபடி "அமைப்புச் சீர்திருத்தங்களை" முன்னெடுப்பதோ மாறாது. போவதில்லை. அதன் பேரினவாத அரசியல் மாறாது. அனைத்தினும் முக்கியமாகப், போரைக்காட்டிக் கட்டியெழுப்பப்பட்ட ஆயுதப் படை வலிமையும் அதிகாரங்களும் குறையா.

அப்படியானால் எவ்விதமான வேலைத்திட்டத்தின் முலம் ஜனநாயகத்தை மீட்டெடுக்கலாம்? ஏறத்தாழ முழு ட்ரொட்ஸ்கியப் பாரம்பரியமும் திரிபுவாதிகள் உட்படச் சீரழிந்த கம்யூனிஸ்ற் உதிரிகள் அனைவரும் இன்று ஏதோ ஒரு முதலாளியக் கட்சியின் காலடியிற் கிடக்கின்றன. பேரினவாதத்தில் முளைத்த ஜே.வி.பி. இன்னமும் அச் சேற்றில் உழல்கிறது. முன்னாள் படைத் தளபதிக்கும் பின்னால் போகுமளவுக்கு அதை உந்திய சந்தர்ப்பவாத அரசியல் இன்று அதன் நம்பகத் தன்மையைச் சிதைத்துள்ளது.

இது தான் நாட்டின் இன்றைய அரசியலின் அவலம். இதிலிருந்து விடுபடச், சரி-பிழைகள் பற்றியும் மக்களுக்கு நல்லவை-கெட்டவை பற்றியும் விசாரிக்கத் துணியும் அரசியல் ஒன்று எழவேண்டும். ஏறத்தாழ அரை நூற்றாண்டுக் காலப் பாராளுமன்ற இடதுசாரி அரசியலின் விளைவுகளையும் பேரினவாத-குறுந்தேசிய அரசியலின் ஆதிக்கத்தையும் வெல்வது எளிதல்ல.

வவுனியாச் சிறைச்சாலைத் தாக்குதல் மட்டுமன்றி அதைப் பற்றியும் அதன் அடிப்படைக் காரணமான அரசியல் கைதிகளின் நியாயமற்ற நீண்ட காலச் சிறைவாசத்தைப் பற்றியும் "ஜனநாயகத்திற்காகக்" குரல் கொடுப்போர் காட்டும் அசட்டை மேற்கூறிய அவலத்தின் புலப்பாடே.

சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளியின் படுகொலையையும் சிலாபம் மீனவரின் படுகொலையும் என்றோ நடந்து நாம் மறந்துபோன நிகழ்வுகளல்ல. நியாயங்கோரும் அப்பாவி மக்கள் மீதான வன்முறைத் தாக்குதல்கள் யாவும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. எனவே தான் முற்போக்குச் சக்திகள் ஜனநாயகத்திற்கான போராட்டத்தை, ஒவ்வொரு சமூகக் கொடுமைக்கும் எதிரான, ஒன்றோடொன்று உறவுடைய போராட்டமாக முன்னெடுக்க வல்ல மாற்று அரசியலை உருவாக்கத் துணிய வேண்டும்.

*****

# போரும் அரசியலும்

## சி.கா. செந்திவேல்

*(இக் கட்டுரை தேசிய கலை இலக்கியப் பேரவையின் தேசிய மாநாட்டு மலரான புது வசந்தம் சிறப்பிதழிலிருந்து நன்றிகளுடன் எடுத்தாளப்படுகிறது.)*

உலகில் உள்ள அனைத்தையும் விட மனிதர்களே மேலானவர்கள். மனிதர்களுக்கு நிகரான ஒன்றை இவ்வுலகில் எங்குமே காணவியலாது. பிரபஞ்சத்தில் இருந்து உருவாகிய இவ்வியற்கைப் பூவுலகில் மனிதர்கள் தோன்றி வளர்ந்து யாவற்றையும் உருவாக்கி வந்திருக்கின்றார்கள். இயற்கையோடு இணைந்தும் போராடியும் கட்டுப்படுத்தியும் தமக்கானவற்றைப் படைத்து வந்திருக்கின்றார்கள். உணவு, உடை, இருப்பிடம், மொழி, மதம் பண்பாடு போன்றவற்றை உருவாக்கி வளர்தெடுத்தெடுத்து வந்திருக்கின்றார்கள். மனிதர்களது உழைப்புத் திறனும் மூளையின் வளர்ச்சியும் சிந்திக்கும் ஆற்றலும் புதியன. கண்டுபிடிப்பதில் இடையறாத முயற்சியும் மனித குலத்தை முன்னோக்கி எடுத்தும் வந்திருக்கிறது. இத்தகைய மனித வாழ்வுப் பயணம் பல இலட்சம் ஆண்டுகளை கொண்டதாகும். இவ்வாறு மனித குலம் தோன்றி வளர்ந்து இனம் பெருக்கி நவீன அறிவியல் கண்டு வாழ்ந்து வந்த வரலாறு அற்புதமான மானிட வரலாறாக தொடர்கிறது. இங்கே கூர்ந்து அவதானிக்கத்தக்கது மனித இருப்பின் தொடர்ச்சியாகும். இம் மனித இருப்பானது வரலாறு முழுவதும் நெருக்கடிகள், சவால்கள், அனர்த்தங்கள், அழிவுகள் போன்றவற்றை எதிர் கொண்டே வந்திருக்கிறது. ஏற்றத்தாழ்வுகள், பஞ்சங்கள், பட்டினிகள் இடப்பெயர்ச்சிகள், கொடிய நோய்கள், சுரண்டல்கள், அரசியல் ஒடுக்குமுறைகள் போன்றவற்றை எதிர்கொண்டு அவற்றைக் கடந்தே மனித வரலாறு முன்னோக்கி வந்திருக்கின்றது.

இவ்வாறு மனித இருப்பிற்குச் சவால் விடுத்து வந்தவற்றில் போரும் அரசியலும் பிரதான இடத்தில் இருந்து வந்துள்ளன. இவை மனித சமூக வளர்ச்சிப் போக்கில் தற்செயலானவை அல்ல. அவை வரலாற்றின் குறிப்பிட்ட கட்டத்தில் தோன்றி வளர்ந்து விரிவு பெற்றுள்ளவை. மனிதர்கள் ஆரம்பத்தில் மனிதக் கூட்டத்தினராக வாழ்ந்த போது தமக்கான உணவைத் தாமே கூட்டாகத் தேடிப் பெற்றுத் தம்முள் பகிர்ந்துண்டு வாழ்ந்தனர். இயற்கை அனர்த்தங்களையும் வலிய மிருகங்களையும் கூட்டாக ஒன்று சேர்ந்து எதிர்த்து நின்று தமது இருப்பைத் தக்கவைத்தனர். அங்கே

தனியுடைமை எதுவுமற்ற ஒரு சமத்துவமான சமூக வாழ்வு இடம்பெற்று வந்தது. ஆனால், மனித உழைப்பின் முயற்சியும் மூளை வளர்ச்சியும் சிந்திக்கும் ஆற்றலும் கருவிகளின் கண்டுபிடிப்புக்களும் விருத்திக்கும் இட்டுச்சென்றன. அவற்றின் விளைவாக மனிதர்களிடையேயான அடுத்தக்கட்டச் சமூக வளர்ச்சிப் போக்கு உருவாகியது. அதுவே தனிச் சொத்துடைமையின் ஆரம்ப வடிவங்களாகி விரிவு பெற்று முன்னோக்கிச் சென்றது. ஆரம்பகாலச் சொத்துடைமையின் வாயிலாக உள்ளோரும் இல்லாதோரும் என்ற நிலை மட்டுமின்றி உணவைத் தேடுவதிலும் உழைப்பிலும் வேறுபாடுகள் தோன்றின. உழைப்பில் ஈடுபடுவோர் பலராயிருக்க அதில் ஈடுபடாத சிலர் அதன் பலாபலன்களை அனுபவிப்பதான ஆரம்ப நிலைகள் உருவாகின. அச் சூழலில் உழைப்புப் பிரிவினையும் வர்க்கங்களின் தோற்றமும் தனிச் சொத்துடைமையின் வளர்ச்சியும் சமூக வளர்ச்சிப் போக்கின் அடிப்படையாகின. இவற்றின் அடிப்படையாக வர்க்க ஏற்றத்தாழ்வுகளும் முரண்பாடுகளும் போராட்டங்களும் உருவாகி வந்தன. இவற்றின் நடுவே தனிச் சொத்துடைமையினதும் சொத்துடைமையாளர்களினதும் பாதுகாப்பிற்காக அரசு என்பது தோற்றம் பெற்றது. அரசு என்ற ஆரம்ப வடிவம் ஆயுதம் தாங்கிய அரச இயந்திரமாக விருத்தி பெற்றது. காலப் போக்கில் அரசு என்ற பலாத்கார நிறுவனத்தைப் பாதுகாக்கும் அரசாங்கங்கள் தோற்றம் பெற்றன. மேலே கூறப்பட்ட வரலாற்றுப் பின்புலத்தின் ஊடாகவே போர் பற்றியும் அரசியல் பற்றியும் ஒருவரால் தெளிவான கண்ணோட்டத்தைப் பெற்றுக் கொள்ள இயலும்.

எனவே, போர் என்பது சமூக வளர்ச்சிப் போக்கில் தனிநபர்களின் விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் தோன்றிய ஒன்றல்ல. போர் என்பது வர்க்கங்கள், தேசங்கள், நாடுகள், அரசியற் குழுக்கள் ஆகியவற்றுக்கிடையில் நிலவும் முரண்பாடுகள் ஒரு கட்டத்திற்கு வளர்ச்சியடைந்ததும் அவற்றைத் தீர்ப்பதற்குரிய அதியுயர்ந்த போராட்ட வடிவமாகும். தனியுடைமை முறைமையும் வர்க்கங்களும் தோன்றியது முதல், போர் என்பது இருந்து வந்திருக்கிறது எனப் போர் பற்றிய மாக்சிய உலகப் பர்வை எடுத்துரைக்கிறது. இவ்வாறு இடம்பெற்று வந்த போர்களை அநீதியான போர், நீதியான போர் என வகைப்படுத்தக்கூடியனவாகவே அவை அமைந்திருந்தன. தனியுடைமையின் அடிப்படையில் அமைந்த ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பையும் அதன் பொருளாதார நலன்களையும் இருப்பையும் பாதுகாப்பதற்கான போர்கள் நீடித்து வந்தததை ஒரு புறமாகக் காணலாம். மறுபுறத்தில் தமக்கான புதிய சமூகக் கட்டமைப்பைப் பெற்றுக் கொள்வதற்கான போர்கள் இடம்பெற்று வந்துள்ளதையும் காணலாம். முன்னையதில் ஏற்கனவே சொத்துடைமையும் ஆட்சி அதிகாரத்தையும் கொண்ட வரக்க்த்தினர் மேலும் அவற்றை விரிவுப்படுத்திச் செல்வங்களையும் அவற்றுக்குரிய நிலங்களையும் நாடுகளையும் கைப்பற்றவும் போர்களை முன்னெடுத்தனர். பின்னையதில் அடக்கப்படும் வர்க்கங்களைச் சேர்ந்தோர் தம்மீது திணிக்கப்பட்ட அடிமை விலங்குளை உடைத்தெறிவதற்காகப்

போர்களில் ஈடுபட்டனர். அவை மாற்றத்தைக் குறித்து நின்ற புரட்சி எனும் நிலைக்கான போராகவும் இருந்து வந்தன. எனவே நீதியான போர் மக்கள் சார்பானதாகவும் அநீதியான போர் சொத்துடைமை பெற்ற ஆளும் வர்க்கம் சார்பானதாகவும் இருந்து வந்துள்ளதை வரலாறு முழுவதும் காணலாம். இந்த அநீதியான போர் என்பதைப் பழைய புராணங்கள், இதிகாசங்கள், இலக்கியங்கள் வாயிலாகக் காண இயலும். அவை ஒரு தரப்பு நியாயங்களுக்காகத் தத்தமது போர்களை நியாயப்படுத்தி வந்திருக்கின்றன. அத்தகைய போர்களால் அனாவசியமாக மக்கள் அழிவுற்றமை பற்றி அவை அக்கறை செலுத்தியதில்லை. அடிமைகளின் உழைப்பை உறிஞ்சவும் அவர்களை அடக்கிவைக்கவும் இடம்பெற்ற எந்த ஒரு போரும் நீதியான போர் அல்ல. அதே போன்று நிலவுடைமைக் காலத்தில் நில அபகரிப்புகளுக்கும் நாடுகளைக் கைப்பற்றவும் செல்வங்களைப் பறித்துக் கொள்வதற்காகவும் மாமன்னர்கள், மன்னர்கள், தளபதிகள் மட்டுமன்றிக் குறு நில மன்னர்கள் போன்றோரும் நடாத்திய போர்கள் யாவும் அநீதியான ஆத்திரமிகு போர்களாகும். அப் போர்களுக்கு ஆளும் அதிகார வர்க்கமாக இருந்தோர் எத்தனையோ இட்டுக்கட்டுக் கதைகளை கட்டி வீரம் வெற்றி தியாகம் என நியாயப்படுத்த முற்பட்டப் போதிலும் அவை யாவும் அநீதியான போர்கள் என்பதில் ஐயமில்லை.

அன்று மட்டுமின்றி, அண்மைய வரலாறுக் காலத்திற் கூட நிலவுடைமை வர்க்கமும் அதனோடிணைந்த கொலனியவாதிகளும் தொடுத்த ஒவ்வொரு போரும் மக்களின் பெரும் அழிவுகளுக்கு உள்ளாக்கிய அநீதியான போர்களே ஆகும். நாடுகளை அடிமைப்படுத்தவும் அவற்றின் வளங்களை சூறையாடிக் கொள்ளவும் அப் போர்கள் முன்னெடுக்கப்பட்டன. இத்தகைய போர்கள் இன்று வரை நீடித்தபடியே உள்ளன. நவீன அறிவியலும் உயர் தொழில்நுட்பமும் பெற்றுத் தந்த அதி நவீன ஆயுதங்கள் சமகாலப் போர்களில் பயன்படுத்தப்பட்டு வருவதனைக் காணலாம். அவை புதிய புதிய போர் முனைகள் திறக்கப்படுவதற்கும் ஆயுத விற்பனை பெருகுவதற்கும் வழிவகை செய்கின்றன. இப் போர்களினாற் பல கோடி மக்கள் அழிந்துள்ளனர். ஏகாதிபத்தியப் போர்ப் பாதிப்பில் இருந்து இன்று வரை மீளாத மக்கள் தலைமுறையினர் பல நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர் என்பது நோக்கத்தக்கதாகும். அதேவேளை, நீதியான போர்கள் ஒடுக்கப்படும் வர்க்கங்கள் இனங்கள் சமூகங்கள் சார்பாக இடம்பெற்று வந்துள்ளன. அன்று அடிமைச் சமுதாய அமைப்பிலே எசமானர்களை எதிர்த்த அடிமைகளின் போராட்டமாக அமைந்தது ஸ்பாட்டகஸ் தலைமையிலான புரட்சிப் போர். நிலவுடைமையாளர்களை எதிர்த்துப் பண்ணையடிமைகளான விவசாயிகள் தொடுத்த போர்கள் எண்ணற்றவைகளாகும். மாபெரும் பிரஞ்சுப் புரட்சியானது தொழிலாளர்களும் விவசாயிகளும் முதலாளிகளும் இணைந்து நிலவுடைமை ஆதிக்கத்தைத் தகர்த்தெறிய வழிவகுத்தது. அதன் பின் அதே பிரன்சின் பாரிஸ் நகரிலே தொழிலாளி வர்க்கத்தின் ஆயுத எழுச்சி இடம்பெற்று அங்கிருந்து முதலாளி வர்க்கம் தேற்கடிக்கப்பட்டுத் துரத்தப்பட்டது. இரண்டு

மாதங்களை தொழிலார்கள் தமது ஆட்சி அதிகார கட்டுப்பாட்டின் கீழ் பாரிஸ் கமியூன் என்ற பெயரில் நிலை நிறுத்தி வைத்திருந்தனர். கொலனித்துவவாதிகளையும் முதலாளி வரக்கத்தினரையும் எதிர்த்து எழுந்த போர்கள் ஏராளமானவை. ஆசிய ஆபிரிக்க இலத்தின் அமெரிக்க நாடுகளிலே அவற்றுக்கான வரலாற்றுத் தடயங்களைக் காணலாம். இவை யாவும் மக்கள் சார்பான நீதியான போர்களாகும்.

மேலும், மாபெரும் ஒக்டோபர் புரட்சியும் அதனைத் தொடர்ந்த சீனப் புரட்சி உட்பட தேசிய விடுதலைப் போராட்டங்களாக வெடித்தெழுந்து போர்கள் யாவுமே முற்போக்கான நீதியான போர்களாகும். அதேபோன்று, ஒவ்வாரு நாட்டிலும் தத்தமது ஆளும் வர்க்கங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஒவ்வொரு சிறிய, பெரிய போராட்டங்களும் நீதியானவையே. இந்திய உபகண்டத்திலும் அதே போன்று ஆசியாவின் பரந்த நிலப்பரப்பெங்கும் மக்களுக்கான நீதியான போர்களைக் காண முடியும். இவற்றிடையே நீதியான போர், அநீதியான போர் என்பதற்குக் கடந்த நூற்றண்டில் இடம்பெற்ற இரண்டாம் உலகப்போர் சிறந்த உதாரணமாகும். ஹிட்லர், முசோலினி, யப்பானிய பிற்போக்காளர்கள் முன்னிற்று முன்னெடுத்த போர் முதலாளித்துவத்தின் உச்சமான பாசிசத்தை நிலை நிறுத்த முன்னின்ற அநீதியான போராகும். அதனை முறியடிக்க சோவியத் யூனியன் தலைமையில் சோவியத் மக்களும் உலக மக்களும் அணிதிரண்டு முன்னெடுத்த பாசிச எதிர்ப்புப் போர் நீதியான போராகும். இறுதியில் அந் நீதியான போரே வெற்றிகொண்டது.

இவ்வாறு மனிதகுல வரலாறு முழுவதும் இருந்து வந்துள்ள போர்களையும் அவற்றின் சமூகப் பின்புலமாக அமைந்த பொருளாதாரக் காரண காரியங்களையும் நோக்கும்போது, போருக்கும் அரசியலுக்கும் உள்ள உறவுநிலை பற்றி நோக்குவது தேவையாகிறது. எந்தவொரு போரிலும் அரசியலற்ற போரைக் காணவியலாது. மதத்தின் பெயரிலான போரிலும் இனத்தின் காரணமான போரிலும் அல்லது நாடுகளுக்கிடையிலும் நாடுகளுக்குள்ளேயும் இடம்பெறும் எத்தகைய போரிலும் அரசியல் இல்லாத போரென்று எதனையுங் கூறமுடியாது. ஏற்றத் தாழ்வும் சுரண்டலுங்கொண்ட பொருளாதார சமூக அமைப்பில் வர்க்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியே அரசியல் என்பது முன்னெடுக்கப்படுகிறது. எனவே வர்க்க சமூகத்தில் வர்க்கங் கடந்த அரசியல் என்பது வெறும் ஏமாற்றேயாகும். இத்தகைய வர்க்கம் சார்ந்த அரசியலும் வர்க்கம் சார்ந்த போர்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவாறே பயணித்து வந்துள்ளன. அதாவது, அரசியற் சாராம்சம் இல்லாத போர்களை உலகில் எங்கும் காணமுடியாது. ஏனெனில் அரசியற் குறிக்கோள்களை அடைவதற்குப் போர் தேவைப்படுகிறது. அதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டதும் போர் முடிவுக்குக் கொண்டுவரப்படுகிறது. அப் போருக்கான குறிக்கோள் அல்லது இலக்கு அடையப்படாதவிடத்து போர் தொடர்கிறது. இதனை, நமது நாடு உட்படச், சமகால உலகெங்கும்

காணக்கூடியதாக உள்ளது. போருக்கும் அரசியலுக்கும் உள்ள உறவைப் பற்றி எடுத்துரைக்கும்போது "அரசியலின் நீடிப்பே போராகும்" எனத் தோழர் மாஓ சொன்னது இந்த அர்த்தத்தில்தான் போர் அரசியலாகவும் அரசியல் போர் நடவடிக்கையாகவும் விளங்குகின்றன. புராதன காலம் முதல் அரசியற் குணாம்சம் இல்லாத போர் எதுவுமே இருந்ததில்லை. ஆனாற் போருக்கு அதற்கேயுரிய விசேட அம்சங்களுண்டு. இந்த அர்த்தத்தில் போரைப் பொதுவாக அரசியலுடன் சம்பந்தப்படுத்த முடியாது. ஆனால் "விசேட நடவடிக்கைகள் மூலம் அரசியலின் நீடிப்பே போர் என்பதாகும்". எனவே அரசியலை இரத்தம் சிந்தாத போர் என்றும் போரை இரத்தம் சிந்தும் அரசியல் என்றும் கூறலாம்.

இவ்வாறு எடுத்துரைப்பதன் மூலம் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்ற வெளிச்சத்தின் ஊடாகப் போரையும் அரசியலையும் அணுகி ஆராயும் மாக்ஸியவாதிகள் போர்களை ஊக்குவிப்பதாகவும் அரசியலை பலாத்காரம் கொண்டதாக மாற்றுவதாகவும் குற்றம் சாட்டப்படுகின்றனர். இவ்வாறு குற்றம் சாட்டும் ஆளும் வர்க்கச் சக்திகளும் வல்லாதிக்கவாதிகளும் தம்மைப் போருக்கு எதிரான பலாத்காரமற்ற அகிம்சாவாதிகளாகவும் ஜனநாயகவாதிகளாகவும் காட்டிக்கொள்கின்றனர். ஆனால் அவர்களது உண்மையான சுயரூபம் அத்தகையதல்ல. ஏற்கனவே அரச யந்திரம் என்பதன் ஊடாகப் பலாத்காரத்தைக் கொண்டிருப்பவர்கள் தனிச்சொத்துடைமை கொண்ட ஆளும் வர்க்கத்தினரே. உலகில் வல்லாதிக்கம் செலுத்தி நிற்கும் அவர்களே, உலகின் போர்களது ஊற்று மூலமாக விளங்கிய கொடிய போர்களை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆனால் உலகில் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களும் இனங்களும் ஏனைய சமூகங்களின் விடுதலைக்காக நின்று வரும் மாக்ஸிஸவாதிகளும் ஒரு நாளைக்குக் கூட போர் நிகழ்வதை ஆதரிக்கவில்லை. ஆனால், ஆளும் வர்க்கங்களினாலும் வல்லாதிக்க சக்திகளினாலும் ஒடுக்கப்பட்ட மக்களின்மீது போர் திணிக்கப்படும்போது அவ் அநீதியான போரை நீதியான போரினால் எதிர்த்து முறியடிக்க முன் நிற்பர். ஓன்று, போரை அவர்கள் விரும்பவில்லை. இரண்டாவது, அவர்கள் அதற்கு அஞ்சவில்லை என்ற தெளிவான வரையறையுடனேயே அவர்கள் போர் பற்றிய கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளனர். இவ்வாறு போர் பற்றியும் அதற்கும் அரசியலுக்கும் உள்ள தெளிவான உறவையும் வரையறைகளையும் விளங்கிக் கொண்டதாலேயே ஏகாதிபத்தியவாதிகளும் ஹிட்லரின் தலைமையிலான ஃபாசிஸவாதிகள் தொடுத்த போரை சோவியத் மக்களும் அவர்களது பொல்ஷ்விக் கட்சியும் அன்று தோற்கடித்தன. அவ்வாறே யப்பானிய அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தொடுத்த போரை சீன மக்களும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் தோற்கடித்தன. எனவே அநீதியையும் ஒடுக்குமுறையையும் ஆக்கிரமிப்பையும் வல்லாதிக்கத்தையும் ஒருவர் எதிர்த்து நிற்கவில்லை என்றால், மக்களோ நாடோ எதிர்த்துப் போர் தொடுக்கவில்லை என்றால்

அடிமைத்தனமாக வாழ்வதற்கு மட்டுமே அவர்கள் தகுதியானவர்களாக இருக்க முடியும்.

போர் அழிவுக்குக் காரணமானது என்பதில் ஐயமில்லை. அது மக்களை அழித்து சின்னாபின்னப்படுத்தும் என்பது உண்மை. அது மனித இருப்பைக் குலைக்கும் விதமான அச்சுறுத்தும் தன்மையினைக் கொண்டிருக்கிறது என்பதும் உண்மை. அதற்காக அதனை எதிர்த்து நிற்காவிடில் அது மேலும் மேலும் மக்களை விழுங்கவும் மனித இருப்பை நாசஞ்செய்யவுமே செய்யும். ஆனால் அநீதியான போர் ஒவ்வொன்றையும் நீதியான போர்கொண்டு எதிர்த்து முறியடிக்கும்போது மனித இருப்புப் பாதுகாக்கப்படுவதுடன் புதிய சமூக அமைப்பும் புதிய சமாதான சூழமும் தோற்றுவிக்கப்படும். கடந்த காலங்களில் சமூக மாற்றங்கள் ஏற்படவும் மக்கள் ஆட்சிகள் மலரவும் போர்கள் உதவியுள்ளன. இவ்விடத்திலேதான் தீய விடயங்களை நல்ல விடயங்களாக மாற்றமுடியும் என்பது நிரூபணமாகி நிற்பதைக் காணலாம்.

எனவே போர்கள் பற்றிய தெளிவிற்கு அரசியற் கண்ணோட்டம் தெளிவாக இருத்தல் அவசியமாகும். போர் பற்றிய ஒவ்வொரு விடயமும் சரியானதும் தூரநோக்கிலுமான அரசியல் அணுகுமுறை மூலம் கண்டறியப்பட வேண்டும். அப்போதுதான் போரின் ஊற்று மூலங்களைக் கண்டறிய முடியும். அவற்றைக் கண்டறியாது விட்டால் எத்தகைய போரையும் மக்கள் சார்பாக நின்று எதிர்க்கவும் முடியாது முறியடித்து தேர்க்கடிக்கவும் முடியாது. ஒரு தேசத்தின் மீதோ ஒரு தேசிய இனத்தின் மீதோ போர் ஒன்று ஏவப்படும் போது அதனை வெறும் உணர்ச்சிவசப்பட்ட குறுகிய நிலை நின்று ஆழமற்ற அரசியல் போக்கைக் கடைப்பிடித்து எதிர் கொள்ள முடியாது. தூர நோக்கமும் ஆழ்ந்தகன்ற அரசியல் பார்வையும் அவசியமாகின்றன. திணிக்கப்படும் அல்லது ஏவப்படும் போரின் பொருளாதார, அரசியல், சமூக, பண்பாட்டு மற்றும் வரலாற்றுரீதியான பின்புலங்களும் யதார்த்த நிலைமைகளும் அடிப்படைக் காவனத்திற்கு உரியனவாகின்றன. இவை ஒடுக்கலுக்கு உள்ளான மக்கள் மத்தியில் அறிவு பூர்வமாகவும் அரசியல் மயப்படுத்தலாலும் புரிதல்களுக்கு உட்படுத்தப்படல் வேண்டும். இல்லாவிடில் திணிக்கப்படும் போரினால் மக்கள் பெரும் அழிவுகளையும் இழப்புகளையும் பெறுவதுடன் தாம் ஆதரித்த வெற்றிபெற இயலாத அரசியலிலும் வெறுப்புற்று விரக்தியடையவர். இவ்வாறான போக்குக்கள் உலக அரங்கில் நமது நாட்டுச் சூழலிலும் காண முடிந்தவைகளாம். எனவே போர் அரசியல் பற்றிய ஆழமான அறிவும் தெளிவும் அவசியமாகின்றன. அதன் மூலமே மனித நோயத்தின் அடிப்படையிலான மனித இருப்பின் மீது உண்மை அக்கறையைச் செலுத்த முடியும்."

*****

# மானிட இருப்பை அச்சுறுத்தும் இலாப வேட்கை

## பேராசிரியர் சி. தில்லைநாதன்

*(இக் கட்டுரை தேசிய கலை இலக்கியப் பேரவையின் தேசிய மாநாட்டு மலரான புது வசந்தம் சிறப்பிதழிலிருந்து நன்றிகளுடன் எடுத்தாளப்படுகிறது.)*

மனிதன் ஒரு சமூகப் பிராணி என்று அரிஸ்டோட்டல் கூறினார். ஏனைய விலங்குகளைப்போல் அன்றி, விரயத்தை தவிர்த்து மேலதிகமாக உள்ளவற்றைப் பகிர்ந்து கொள்ளவும் நாளைய தேவை கருதிப் பாதுகாத்து வைக்கவும் பயிர் விளைக்கவும் மறு நடவு செய்யவும் மனிதன் பழகிக் கொண்டுள்ளான். தான் பட்டனவற்றிலிருந்து படித்துக்கொள்ளும் ஆற்றலும் அவனிடம் உண்டு. சமூக அக்கறையும் உலகம் பயன்பட வாழவேண்டும் என்ற உணர்வும் பகுத்துண்டு பல்லுயிரோம்பும் பண்பும் வளர்ந்தவிடத்து மனித நாகரீகம் வளம்பெற்றது. சமூகத்தைச் சார்ந்தன்றி வாழ்முடியாத மனிதன் சுயநலம் மிகுந்தவனாகச் சமூகத்தைச் சுரண்ட முற்படுமிடத்து அனர்த்தங்கள் தோன்றுகின்றன. மனிதன் தான் வாழும் சமூகத்தைப் பற்றிய விளக்கமும் அக்கறையும் அருகியவனாகவும், தான் வாழுகின்ற சூழலை மாசுபடாது பாதுகாக்கத் தவறுபவனாகவும், தன் மானிட விழுமியங்களைத் தான் வளர்த்த தொழில் நுட்பம் விஞ்சிவிடாது கட்டுப்படுத்த முடியாதவ னாகவும் ஆவது எவ்வாறு என்பது எண்ணிப்பார்க்கப்பட வேண்டிய விடயம்.

பொருளாதார வாழ்வில் தனியார் முதலாளித்துவம் ஆதிக்கம் செலுத்து கின்ற சூழ்நிலையில் இலாப வேட்கையே பிரதான உந்து சக்தியாகக் கருதப்படுகிறது. போடுகின்ற முதலுக்கும் உற்பத்திக்கான பங்களிப்புக்கும் ஈடுசெய்யுமளவுக்கு நியாயமான இலாபத்தை எதிர்பார்ப்பதற்குச் சமூக அடிப் படையிலோ பொருளியல் அடிப்படையிலோ தார்மீக அடிப்படையிலோ மறுப்புத் தெரிவித்தல் சாலாது. ஆனால், அவ்வடிப்படைகளில் நியாயம் கற்பிக்க இயலாத அளவுக்கு “இலாபம் இலாபத்துக்காகவே” என்ற ஆவேசத்தில் முனைந்து நிற்பது மூர்க்கத்தனத்தை வளர்த்து மானிடப் பண்புகளை மழுங்கடிக்கக் கூடும்.

“ஊருஞ் சதமல்ல் உற்றார் சதமல்ல.... தேசத்திலே யாருஞ் சதமல்ல நின் தாள் சதம் கச்சி ஏகம்பனே” என்று பட்டினத்தார் பாடினார். வேறு

எதுவும் சதமல்ல இலாபம் ஒன்றே சதம் என்று கருதப்படுகிறபோது உற்பத்திக்கு கூடுதலான பங்களிப்பினை வழங்கும் தொழிலாளர்கள் உற்பத்திச் செலவினங்கள் என்ற தலைப்பின் கீழ் உற்பத்திக்கு உபயோகிக்கப்படும் வெறும் கருவிகளைப்போல் நோக்கப்படுகின்றனர். உற்பத்திச் செலவினை இயன்றவரை குறைப்பதும் இலாபத்தை அதிகரிப்பதற்கான உபாயமாகும். அவ்வாறு இலாபத்தை அதிகரிக்கும் வேட்கையால் உழைக்கும் மக்கள் கூலிகளாக அடிமைகொள்ளப் படுகின்றனர். ஆபிரிக்கக் கறுப்பின மக்கள் மனிதர்களாகவன்றி மலிவான உற்பத்திக் கருவிகளாகச் செல்வந்தர்களால் விலைகொடுத்து வாங்கப் பட்டனர். பிஜித் தீவின் கரும்புத் தோட்டங்களுக்குக் கூலிகளாகக் கொண்டு செல்லப்பட்டவர்களின் "செக்கு மாடுகள் போலுழைத்து ஏங்கிய" அவலங்களை மகாகவி பாரதி பாடியிருக்கிறார். எங்கள் தேசத்துத் தேயிலைத் தோட்டங்களுக்கும் கூலிவேலைக்கு மருட்டியும் விரட்டியும் கொண்டுவரப்பட்டவர்கள் சுரண்டப்படும் கொடுமை தலைமுறை தலைமுறை யாகத் தொடர்கிறது. இன்று பல தொழில் நிலையங்களில் ஏழைகள் முடக்கப்பட்டு இலாபம் பெருக்கும் சாதனங்களாக உறிஞ்சப்படுகின்றனர்.

"நடவு செய்த தோழர் கூலி நாலணாவை ஏற்பதும் உடலுழைப்பிலாத செல்வர் உலகையாண்டுலாவலும்" ஒவ்வாதென்ற பாரதிதாசன் அவ் வழக்கத்தை மிதித்திட வழிதேடினார். ஆனால், இலாப வேட்கை தொடர்வதை உறுதிசெய்யும் வகையில் அதனை நியாயப்படுத்தும் ஒழுக்கக் கோட்பாடுகள்கூட முன்வைக்கப்பட்டுள்ளன. கூலியைக் குறைத்துக்கொடுப்பது நல்லதென்றும் கூடக்கொடுத்தால் உபரி வருமானத்தை தேவையில்லாத வழிகளில் செலவழித்துத் தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்டு விடுவார்கள் என்றும் கூறப்பட்டது. அன்றாடங் காய்ச்சிகளாகக் கூலிகளை வைத்திருப்பதே உசிதமானதாம். தேவையின் நிர்ப்பந்தப் பதைப்பு அற்றவிடத்துக் குளிரையும் வெயிலையும் நோய்நொடிகளையும் பாராது கடுமையாக உழைக்க மாட்டார்களாம். அவர்கள் அடங்கி ஆறுதல்பெற வைப்பதற்குக் கடவுளின் விதி, கர்மவினை என்பன குறித்தும் பேசப்படுகிறது. தீவினை அறுத்து ஈடேற அவைகள் உதவுமாம்.

ஏழை மக்கள் துன்பத்தை மறந்து குதூகலத்திலே திளைக்க உதவும் கலை இலக்கியங்களும் சந்தையைப் பிடித்து இலாபத்தைப் பெருக்கி வருகின்றன. திரைப்படத் துறை நல்லதோர் உதாரணமாகும். தமிழர் சமூக வாழ்விலும் அரசியலிலும் அதீத செல்வாக்குச் செலுத்திவரும் சினிமா பயனற்ற கற்பனைகளிலும் பகற் கனவுகளிலும் பெருவாரியான மக்களை மயக்கிவைத்திருக்கிறது. அதிலே, காற்றிலேறி விண்ணையும் சாடும் வீரம், மதி மயக்கும் காதல், பயங்கரக் கவர்ச்சி என்பவை மட்டுமன்றி, "நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால் ஏழைகள் வேதனைப்பட மாட்டார்" என்பது போன்ற பாமரரை ஈர்க்கும் பிரகடனங்களும் மலிந்திருக்கும். எழுந்தமானத்துக்குச் சொல்லப்படுகிற நியாயம் என்னவென்றால், பகல்

முழுக்கக் கஷ்டப்படுகின்றவர்கள் மாலையில் சிறுபொழுதாவது மகிழ்ந்திருக்க வசதிசெய்யும் கைங்கரியத்தை நிறைவேற்றும்கிறோம் என்பதாகும். ஆனால், கஷ்டப்படுகிறவர்கள் தங்களுடைய அவலங்களையும் அவற்றுக்கான காரணங்களையும் நினைத்துப் பார்க்கவோ விளங்கிக்கொள்ளவோ விடாதிருப்பது கொள்ளை இலாபம் அடிப்பவர்களுக்கு அனுகூலமானதா யிருக்கும் என்பது சொல்லப்படுவதில்லை. இச்சந்தர்ப்பத்தில்,

> “பாமர மக்கள் மகிழ்ந்திட வைத்தல்
> படங்களின் நோக்கமெனின்,
> நாமம் குழைத்திட வோஅறி வாளர்கள்
> நற்கலை கண்டார்கள்?“

என்று மடமையை வளர்க்கும் அவ் வஞ்சகத்தைப் பாரதிதாசன் சாடியமை எண்ணிப் பார்க்கத்தக்கது.

இவ்வாறு அறிவாளர்களின் கண்டுபிடிப்புக்கள் பல அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக, பல்தேசக் கம்பெனிகளதும் கூட்டுத்தாபனங் களினதும் கைகளில் அவற்றின் இலாபத்தைப் பெருக்கப் பயன்படுத்தப்படும் அளவுக்குப் பரந்த மானிடத்தின் நன்மைக்குப் பயன்படக் காணோம். அக் கண்டுபிடிப்புக்களின் வழிப்படும் உற்பத்திப் பொருட்களைப் பெருமளவில் தயாரிக்கவும் இலாபகரமாக விற்பனை செய்யவும் மேற்கொள்ளப்படுகின்ற வழிமுறைகளும் மானிட நலனுக்கு ஊறு விளைப்பனவாக உள்ளன. தொழில்நுட்ப, மருத்துவ, ஆயுத உற்பத்தித் துறைகளில் அதைத் துலாம்பரமாகக் காணலாம். பொருளாதார, எரிபொருள், உணவு, சுற்றுலா, கல்வி முதலான துறைகளிலும் எல்லைமீறி இலாபம் சம்பாதிக்கும் எத்தனங்கள் மானிட நலனுக்குப் பங்கம் விளைவிப்பனவாக உள்ளன. சூழல் மாசடைதல், காலநிலை மாற்றம், புவி வெப்பமடைதல் முதலானவை குறித்து நிறையப் பேசப்படுகிறது.

உற்பத்தியினையும் இலாபத்தையும் எல்லையின்றிப் பெருக்குவதற்காக நுகர்வுக் கலாசாரமும் தேவை தீர்ந்ததும் தூக்கி எறிந்துவிடும் கலாசாரமும் மிதக்கும் (நிலைத்திராத) விழுமியங்களும் வெகு வித்தாரமாக வளர்க்கப் படுகின்றன. பண்டங்களின் நுகர்வு உண்மையான தேவைகளின் அடிப்படையி லன்றிப் பகற்கனவுகளால் நிர்ணயிக்கப்படும் நிலை வள்ர்ந்து வருகிறது. வெகுசன ஊடகங்கள் பகற்கனவுகளை வளர்க்கின்றன. அவ்வூடகங்களில் முக்கிய இடம்பெறும் விளம்பரங்கள் மனங்கவரும் வகையில் கெட்டித்தன மாகத் திட்டமிடப்படுகின்றன. ஒருவருடைய சமூக அந்தஸ்து உடல் வலுவினாலோ ஒழுக்கத்தினாலோ கல்வியினாலோ அன்றி, நுகரும் தோரணையிலே அடையாளம் காணப்படும் தன்மை வளர்கிறது. மற்றவர் களிடமிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்டும் நவீன நடையுடை பாவனை களை நாடும் போக்கு அதிகரித்து வருகிறது. இஷ்டம்போலத் தேவை முடிந்ததும் கைவிடும் உறவுமுறையினை ஒரு ஆடம்பரமாக மதிக்கும்

மனப்பான்மை முன்னெடுக்கப்படுகிறது. இப்படியான நுகர்வோர் சமூகம் நுகர்வோருக்கு வலுவூட்டுவதாகும் என்று சிலர் வாதிட்டாலும், நடை முறையில் அது முதலாளித்துவ விழுமியங்களுக்கு அழுந்தம் தந்து, வறிய மக்களிடமிருந்து செல்வந்தர்களைப் பிரிக்கும் இடைவெளியை அதிகரிக்கச் செய்வதாகவே உள்ளது. அப்படியான நிலையில் மேலாதிக்கம் பெறுவது நுகர்வுச்சார்புவாதமேயன்றி நுகர்வோர் அல்லர்.

இன்று மேலெடுக்கப்படும் உலகமயமாக்கலும் பெருமுதலாளித்துவத்தின் சந்தையை எல்லைகடந்து பெருக்கும் வேட்கையை அடிப்படையாகக் கொண்டதுவே. பன்முகத்தன்மை கொண்டதாக உலகம் உள்ளது. அவ்வகையுறு தன்மையே தன் பேரழகென்றும் பலமென்றும் போற்றப்படுகிறது. ஆனால் பல்தேச முதலாளித்துவத்தை பொறுத்தவரை வேறுபாடுகளை மிதித்து மேவுதல் சர்வலோக மேலாதிக்கம் கைகூடுவதை இலகுவானதாக்கும். அந்தக் கைங்கரியத்தை நவீன தொடர்பாடற் சாதனங்கள் வெகு துல்லியமாக செய்துவருகின்றன. ஓரங்கட்டப்பட்டுள்ள பெரும்பாலான மக்களின் கவனம் அவர்களுடைய பொருளாதாரப் பிரச்சனைகளிலும் வறுமையிலிருந்தும் திசைதிருப்பப்பட்டு இனத்துவ முரண்பாடுகளிலும் ஆள்புல ஒருமைப்பாடு, மக்களின் இறைமை போன்றவற்றிலும் குவிமையப்படுத்தப்படுகிறது. வர்க்க அரசியலை மறைக்கும் வகையில் இனத்துவ அரசியல் மேலெடுக்கப்படுவது வெள்ளிடைமலை.

மானிட இருப்பிலோ இருப்பிடத்திலோ எதிர்காலத்திலோ கரிசனை இகந்த, இலாபம் பெருக்குவதையே குறியாகக் கொண்ட எத்தனங்களின் தாத்பரியங் களைக் கவனத்துக்கெடுக்கையில், இங்கிலாந்திலே தொழிற்சாலை கள் தொடங்கப்பட்டபோது மனிதத்தை மறந்த இலாப நோக்கு மேலோங்கிய மையின் விளைவுகள் பற்றி ஒரு நூலில் (J.L. Hammond and Barbara Hammond, Rise of Modern Industry, London, 1937) கூறப்பட்ட சில விடயங்கள் சிந்தனைக்கு உரியவையாகும். *“இங்கிலாந்து இலாபங்களை வேண்டியது, இலாபங்களைப் பெற்றுக்கொண்டது. எல்லாமே இலாபத்தை நோக்கித் திரும்பின. நகரங்கள் தங்கள் இலாபகரமான அழுக்கையும் தங்கள் இலாபகரமான புகையையும் தங்கள் இலாபகரமான அசுத்த சேரிகளையும் தங்கள் இலாபகரமான சீர்குலைவையும் தங்கள் இலாபகர மான அறியாமையினையும் தங்கள் இலாபகரமான கையறுநிலையையும் பெற்றுக்கொண்டன.... அழகும் மகிழ்வும் ஓய்வும் கற்கையும் நாகரீகமான பார்வையும் பழக்கமும் புதிய சூழலில் மனிதனுக்குக் கிட்டாமல் போயின்”.*

*****

www.padippakam.com

*நவகொலனியத்தின் கீழ்த் தேசியமும் தேசமாதலும்*

# ஏகாதிபத்தியத்தின் கருவியாகச் சுயநிர்ணயம்

*- இமயவரம்பன் -*

சுயநிர்ணய உரிமை என்பது ஐ.நா. சபையின் தத்துவ நோக்கில் உட்பொதிந்துள்ளது. ஆயினும் 1948இல் ஐ.நா. சபை ஏற்று அறிவித்த உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்தில் (Universal Declaration of Human Rights) அது உள்ளடங்கவில்லை. எவ்வாறாயினும், சுயநிர்ணய உரிமை எனும் பதம் ஐ.நா. சபையின் பல்வேறு பிரகடனங்களிலும் கூட்டு ஒப்பந்தங்களிலும் அனைத்து மக்கள் திரள்களினதும் சுயநிர்ணய உரிமைக்கான உலகளாவிய உரிமையாகயும், அதற்கமையத், தமது அரசியற் தகைமைச் சுதந்திரமாகத் தீர்மானிக்கவும் தமது பொருளாதார, சமூக, பண்பாட்டு விருத்தியைச் சுதந்திரமாக முன்னெடுக்கவுமான உரிமையாக வரைவிலக்கணப்பட்டுள்ளது. எனினும், உலகிலுள்ள அரசுகளின் ஒருமைப்பாட்டைப் பற்றிய அக்கறை களால், ஐ.நா.வின் நடைமுறையிலும் சர்வதேசச் சட்டத்திலும் சுயநிர்ணய உரிமை என்ற கருத்தாக்கம் அரித்துச் செல்லப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க வாறு, 1993ம் ஆண்டின் மனித உரிமைகள் பற்றிய ஐ.நா.வின் உலக மாநாட்டின் வியென்னாப் பிரகடனம் பின்வருமாறு கூறியது:

> *[சுயநிர்ணய உரிமை என்பது] மக்களின் சமவுரிமை நியதிக்கும் சுயநிர்ணய உரிமைக்கும் உடன்பாடாக நடந்து அதன்மூலம் பிரதேச முழுதிலுமுள்ள மக்களனைவரையும் எவ்விதமான பாகுபாடுமின்றிப் பிரதிநிதித்துவஞ்செய்யும் அரசாங்கத்தைக் கொண்டுள்ள சுயாதிபத்திய மும் சுதந்திரமுங் கொண்ட அரசுகளின் பிரதேச ஒருமைப்பாட்டையோ அரசியல் ஐக்கியப்பாட்டையோ முற்றாகவோ பகுதியாகவோ கூறுபடுத்தவோ ஊறுபடுத்தவோ முனையும் எச் செயலையும் அங்கீகரித்தற்கோ ஊக்குவித்தற்கோ உரியதாகக் கொள்ளப்படலாகாது.*

“மக்களின் சமவுரிமை நியதிக்கும் சுயநிர்ணய உரிமைக்கும் உடன்பா டாக நடந்து அதன்மூலம் பிரதேச முழுதிலுமுள்ள மக்களனைவரையும் எவ்விதமான பாகுபாடுமின்றிப் பிரதிநிதித்துவஞ்செய்யும் அரசாங்கத்தைக் கொண்டுள்ளதாக” ஒரு அரசு கருதப்படும்போது மேற் கூறியவாறு கட்டுண் டுள்ள சுயநிர்ணயம் பிரிந்துபோகும் உரிமையை உள்ளடக்காது. அந்த அரசு ஒழுங்காக நடந்துகொள்ளத் தவறுமிடத்து மட்டுமே அது உள்ளடங் கும். மக்களின் சமவுரிமை நியதிக்கும் சுயநிர்ணய உரிமைக்கும் உடன்



படிப்பகம்

பாடாக நடந்துகொள்வதென்பது, உண்மையில் மக்கள் தமது அரசியல் தகைமையைச் சுதந்திரமாகத் தீர்மானிக்கவும் தமது பொருளாதார, சமூக, பண்பாட்டு விருத்தியைச் சுதந்திரமாக முன்னெடுக்கவுமான உரிமையை மறுக்கும் “உள்ளக சுயநிர்ணயம்” என்ற கலங்கலான பதத்துடன் அடையாளங்காணப்படுகிறது. பல ஓடுக்குமுறை அரசுகள் பிரிந்துபோகும் உரிமையைப்பற்றி அஞ்சாது தேசிய ஒடுக்குமுறையில் ஈடுபடுவதற்கு 1993இன் வியென்னாப் பிரகடனத்திலுள்ள நெகிழ்வுத்தன்மை இடமளிக்கிறது. “சர்வதேசச் சமூகம்” எனவும் அழைக்கப்படும் ஏகாதிபத்திய நாடுகள், முக்கியமாக ஐ.நா. சபையைக் கட்டுப்படுத்தும் ஒரு பெருவல்லரசு, குறிப்பிட்ட ஒரு அரசை இலக்கு வைக்கும்போது மட்டுமே, அந்த அரசு சட்டரீதியான அந்நியக் குறுக்கீட்டின் மூலம் பிரிவினை தன் மீது திணிக்கப்படும் அபாயத்தை எதிர்நோக்குகிறது.

சுயநிர்ணய உரிமை எனும் நெறி, முதன்முதலில் ரஷ்யப் புரட்சியின் தொடர்பில் லெனினால் முன்வைக்கப்பட்டது. அது, ஸார் ஆட்சியின் கீழ் ஒடுக்கப்பட்ட அனைத்துத் தேசங்ளிடையிலும் சுயதெரிவின் அடிப்படையில் ஒற்றுமையைப் பேணி, அதன்மூலம் அவை சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் ஒன்றினுட் சமமமான பங்காளிகளாகத் தொடர்ந்திருக்க வேண்டி, நன்கு சிந்தித்து வகுக்கப்பட்ட ஒரு மூலோபாயமாகும். தேசங்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்திய நோக்கம் ஏதெனின், பிரிந்துசெல்லும் உரிமையானது பிரிவினையை ஊக்குவிப்பதற்கு மாறாக, எவ்விதமான கட்டாயமுமின்றிச், சுயவிருப்பின் அடிப்படையில் ஒற்றுமையை இயலுமாக்கலாகும்.

ஏகாதிபத்தியம் என்றுமே சுயநிர்ணயத்தைை அவ்வாறு நோக்கியதில்லை. பெரிதும் மெச்சப்படுவதான, அமெரிக்கச் சனாதிபதி வூட்றோ வில்சன் முதலாம் உலகப் போரையடுத்து 1918இல் முன்வைத்த சுயநிர்ணயக் கருத்தாக்கம் —லெனினின் சுயநிர்ணய உரிமைக் கருத்தாக்கத்துக்கு முரணாகப்— பெருமளவும் போர்க்கால மூலோபாயங்களையும் ஏகாதிபத்திய வல்லரசுகளிடையிலான ராஜதந்திரத்தையும் பற்றியதேயொழியத் தேசியப் பிரச்சனைகளின் இனத்துவ, சமூகக் கவனிப்புக்களைக் கொண்டதல்ல. வில்சனின் கருத்துக்களை நிபந்தனையின்றிப் பாவிக்க இயலவில்லை. ஏனெனின், தேசிய சுயநிர்ணயத்தின் தேவைகள், பலவிடத்தும், ஏகாதிபத்திய நலன்கட்கு முரணாகச் சென்றன. அதைவிடவும், வில்சனின் சுயநிர்ணயம் நயவஞ்சகமானதாகவும் இருந்தது. 1918க்குச் சிலகாலம் முன்பே அமெரிக்கப் படைகள் நிக்கராகுவாவையும் (1912-33) ஹெயிற்றியையும் (1914-1934) டொமினிக்கன் குடியரசையும் (1916-24) கியூபாவையும் (1906க்குப் பின் மூன்றாம் முறையாக 1917-1933 வரை) ஆக்கிரமித்துக் கைப்பற்றியிருந்தன. இப் படையெடுப்புக்கட்கும் மேலாக, மத்திய அமெரிக்காவைத் தனது கட்டுப்பாட்டுக்குட் கொண்டுவந்து வைத்திருக்கும் நோக்கிலும் ராணுவ வழியிலும் பிற வழிகளிலும் தனது பிராந்திய விஸ்தரிப்பிற்காகவும் லத்தின்

அமெரிக்காவின் பெரும் பகுதியில் அமெரிக்கா தனது வன்முறை நிர்ப்பந்தத் தந்திரோபாயங்களையும் பிரயோகித்து வந்தது.

இந்தியா உட்படப் பிரித்தானியக் கொலனிகள் பலவற்றுக்குச் சுதந்திரம் வழங்கப்படுவதை அமெரிக்கா ஆதரித்துப் பேசியமை உண்மையே. ஆயினும் பிரெஞ்சுக் கொலனியவாதிகள முறியடிக்கப்பட்ட பின்பு தென் வியற்நாமை அமெரிக்கா கைப்பற்றுதை அது தடுக்கவில்லை. அமெரிக்கா வேறு பல நாடுகளைக் கைப்பற்றியது அல்லது நாடுகளிற் தனது பொம்மை அரசுகளை நிறுவியது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நவகொலனியச் செயற்பாட்டு முறை பழைய கொலனியச் செயற்பாட்டு முறையினின்று வேறுபட்டதாயினும், அதன் ஆதிக்கத்தின் கீழ்வந்த முன்னாள் ஐரோப்பியக் கொலனிகளில் அதன் நடத்தை அதற்கு முன்பிருந்த கொலனிய எசமானர்களினதை விடக் கொடுமையிற் குறைந்ததல்ல.

ஆபிரிக்காவில் கொலனிய, நிறவாத ஆட்சிகட்கெதிரான போராட்டங் களைப் பொறுத்தவரை, கொலனி ஆட்சிக்குப் பிந்திய எந்த ஆட்சியும் ஏகாதிபத்திய விரோதமானதாகவோ சோவியத் யூனியனையோ சீனாவையோ நோக்கிச் சய்வதாகவோ அமையாமலிருப்பதை உறுதிப்படுத்த ஐரோப்பியக் கொலனிய எசமானர்களும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் ஒற்றுமைப்பட்டன. இரண்டாம் உலகப் போரின் பின், முன்னாட் கொலனிகளிலும் அரைக் கொலனிகளிலும் ஆட்சிகள் மாற்றப்பட்டுள்ளன, தலைவர்கள் கொல்லப் பட்டுள்ளனர், நாடுகள் தாக்கப்பட்டும் ஆக்கிரமிக்கப்பட்டும் உள்ளன. சோவியத் யூனியனின் வீழ்ச்சியையும் சீனா சோஷலிசத்தைக் கைகழுவிய தையும் அடுத்து இப் போக்கு மேலும் உக்கிரமாகியுள்ளது.

இனக்குழுக்களின் மனக்குறைகளைப் பயன்படுத்தி ஒடுக்கப்பட்ட மக்களைப் பிளவுபடுத்தல் புதிதல்ல. ஏனெனில், அது, ஒரு காலத்தில், பிரித்தானிய ஏகாதிபத்தியம் சிறப்புப்பெற்றிருந்த தொன்மையான கொலனிய மூலோபாயமாகும். எவ்வாறாயினும், ஏகாதிபத்திய நாடுகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களைத், தனித்தனியாகவோ நாடுகளின் கூட்டாகவோ பிரித்ததற்கு மிக அரிதாகவே எவ்விதமான இனத்துவ அல்லது அதையொத்த அடையாள அடிப்படை பயன்பட்டது. மாறாக, அது ஏகாதிபத்திய நலன்களை முன்னெடுக்கும் விருப்பின் அடிப்படையிலேயே நடந்தது. கொலனி ஆட்சியின் இறுதிக் கோட்டையாயிருந்த சகாராவுக்குத் தெற்கான ஆபிரிக்கப் பகுதியில், கொலனிய ஆட்சியின் சரிவின் பின்னரே பிரிவினை ஒரு ஏகாதிபத்தியச் செயற் திட்டமாக வடிவெடுத்தது.

முன்னாள் பெல்ஜியக் கொலனியான கொங்கோவிலிருந்து கட்டங்கா மாகாணத்தின் பிரிவினை (1960-65) குறுகிய காலமே நிலைத்தது. கொங்கோவின் ஆட்சித் தலைவரான பற்றிஸ் லுமும்பாவின் படுகொலைக்குப் பின், சுதந்திரக் கட்டங்காவுக்கான தேவை இருக்கவில்லை. ஏகாதிபத்தியம் கொங்கோவில் தனது முழுமையான கட்டுப்பாட்டை உறுதிப்படுத்திய பின்பு

சுதந்திரக் கட்டங்கா இல்லாமலாக்கப்பட்டது. அடுத்த செயற் திட்டம் நைஜீரியாவில் நடந்தேறியது. அங்கே ஏகாதிபத்திய நாடுகட்கிடையிலான போட்டி பியா∴ப்ரா பிரதேசத்தின் சுதந்திரப் பிரகடனத்திலும் அதையடுத்த கொடிய உள்நாட்டுப் போரிலும் பங்காற்றியது.

பிரதானமாக அமெரிக்காவும் வேறுபடும் அளவுகளில் அதன் ஏகாதி பத்தியக் கூட்டாளிகளும் உள்நாட்டுப் போரால் பிரிக்கப்பட்ட நாடுகளின் பிரிந்த பகுதிகளை —முக்கியமாகப் பிரிவினைக்கு ஏகாதிபத்தியக் குறுக்கீடு உதவிய போது— வெவ்வேறாகவே இருக்குமாறு ஊக்குவித்தன. இவ்வாறு பிரிக்கப்பட்ட ஆசிய நாடுகளான வியற்நாம், கொரியா, சீனா ஆகியவற்றில், வியற்நாம் மட்டுமே, 1975இல் அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு முறியடிக்கப்பட்ட பின்பு, மீள இணைந்தது. இரண்டாம் உலகப் போரில் ஜேர்மன் ∴பாசிசம் முறியடிக்கப்பட்ட பின்பு அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய மூன்று மேற்கு வல்லரசுகட்கும் சோவியத் ஒன்றியத்துக் குமிடையில் 1945இல் ஜேர்மனி பிரிக்கப்பட்டது. ஜேர்மனியின் மீளிணைப்புக் கான கோரிக்கை சோவியத் சார்பு அணியைப் பலவீனப்படுத்த உதவும் என்ற நிலை 1960களில் ஏற்பட்ட போதே, மீளிணைப்புப் பற்றி அமெரிக்கா அக்கறை காட்டியது.

மாறாகக், கொரிய மீளிணைப்புக்குப் பெருந் தடையாக இன்னமும் அமெரிக்காவே இருந்துவருகிறது. அமெரிக்க ஆதரவுடன் இயங்கிவந்த தாய்வானிடமிருந்து சீனா தனக்குரிய ஐ.நா. சபை ஆசனத்தை 1972இல் பறித்ததிலிருந்து, அமெரிக்கா “இரண்டு சீனாக்கள்” வேலைத்திட்டத்தைத் தாய்வானிலுள்ள சில குழுக்கள் மூலம் ஊக்குவிப்பதுடன் திபெத் பிரிவினை யையும் ஆதரித்துவருகிறது. சோவியத் ஒன்றியம் பலவீனமடைந்த பின்னர், செச்சென்யா ரஷ்யாவிலிருந்து பிரிவதை ஊக்குவிக்க, சவூதி அராபிய ஆதரவுடைய சுன்னி முஸ்லிம் அடிப்படைவாதிகளை அமெரிக்கா பயன் படுத்தியது. பின்னர், சீனாவின் ஷின்ஜியாங் (சிங்கியாங்) உய்கூர் சுயாட்சிப் பிரதேசத்தின் உய்கூர் பெரும்பான்மையினருக்கு இவ் வேலைத்திட்டம் விஸ்தரிக்கப்பட்டது.

1980களின் நடுக்கூற்றில் சோவியத் ஒன்றியம் உலக வல்லரசு என்ற நிலையிலிருந்து சரிந்ததையடுத்தும், குறிப்பாக சோவியத் ஒன்றியத்தின் உடைவை அடுத்தும், அமெரிக்க ஏகாதிபத்தியம், தனது உலக ஆதிக்கத்துக்குத் தடையாக இருந்தவந்த நாடுகளின் சிறுபான்மைத் தேசிய இனங்களிடையிலும் தேசிய சிறுபான்மையினரிடையிலும் பிரிவினைவாத வேலைத்திட்டங்களின் பிரதான ஊக்குவிப்பாயும் உறுதுணையாயும் ஆகியுள்ளது. யூகோஸ்லாவியாவின் உடைவு அமெரிக்காவினதும் ஐரோப்பிய ஒன்றியத்தினதும் (குறிப்பாக ஜேர்மனியினதும் பிரான்ஸினதும் கூட்டுப் பணியாகும். உள்நாட்டுப் போரின் மூலமும் பொஸ்னியாவின் முஸ்லிம், சேர்பிய தேசிய இனத்தவர்களிடையே பகைமையைத் தூண்டியும்

பொஸ்னியா பிரிக்கப்பட்டது. மோதலை வலுப்படுத்தியதில் சவூதி அராபியாவிடம் ஊதியம் பெறும் முஸ்லிம் அடிப்படைவாதத் தன்னார்வப் போராளிகளின் பங்கு கணிசமானது. அதையடுத்துக் கொஸொவோ பிரிவினைவாதிகட்கான ஆதரவின் மூலம் சேர்பியா மேலும் துண்டாடப்பட்டது.

பகையான அல்லது பகையாகக்கூடிய அரசுகளைப் பலவீனப்படுததும் நோக்கிலான அரசியல், ராணுவக் குறுக்கீடும் குழிபறிப்பும் எப்போதுமே அமெரிக்க அயற் கொள்கையின் முக்கியமான ஒரு அம்சமாகவே இருந் துள்ளது. பல்வேறு தேசியவாத வேலைத்திட்டங்களைப் பற்றியும் அமெரிக்கா வினதும் அதன் ஏகாதிபத்தியக் கூட்டாளிகளினதும் அணுகுமுறையும், பிரிவினையை நியாயப்படுத்துமாறு, தெரிந்தெடுக்கப்பட்ட முறையில், மக்கள் திரளொன்றின் சுயநிர்ணய உரிமையின் காவலனாவதும் இப்போது அமெரிக்க அயற் கொள்கையின் பாசறையிலுள்ள ஆயுதங்களாகும். இவ் வகையிலேயே, பல்வேறு தேசியப் பிரச்சனைகளையும் பற்றிய ஏகாதிபத்திய நிலைப்பாட்டினுள் உடன்பாடு இருக்கத் தெரியும்.

தேசியப் பிரச்சனையைப் பற்றிய அமெரிக்கக் கொள்கை என்றுமே உறுதியாக இருந்ததில்லை. ஏனெனில், அது, சம்பந்தப்பட்ட தேசத்தினதோ தேசிய இனத்தினதோ நலன்களின் அடிப்படையிலானதல்ல. மாறாக, அது அமெரிக்காவின் உலக மேலாதிக்க வேட்கையின் அடிப்படையிலானது. முன்னுக்குப்பின் முரணான அமெரிக்க நிலைப்பாட்டுக்கு எரித்திரியா பற்றிய நிலைப்பாடு மிகச் சிறப்பான உதாரணமாகும். 1945இல் எதியோப்பியாவுடன் இணைக்கப்பட்டு ஐ.நா. தீர்மானமொன்றின் அடிப்படையில் 1952இல் சமஷ்டியாக்கப்பட்டு மீண்டும் 1962இல் இணைக்கப்பட்ட எரித்திரியாவின் கிளர்ச்சியாளர்கட்கான அமெரிக்க ஆதரவு கவனத்துக்குரியது. அமெரிக்கா வும் மேற்குலகும் 1962இல் தொடங்கிய எரித்திரியப் போராட்டத்துக்கு 1977 வரை பகையாயிருந்தனர். சோவியத் ஒன்றியத்துக்குச் சார்பானவரான மெங்கிற்ஸு ஹெய்லே மரியம் 1977இல் ஆட்சியைக் கைப்பற்றியதன் பின்பு, அமெரிக்கா எரித்திரியப் போராட்டத்தை ஆதரிக்க முடிவெடுத்தது. அதே வேளை, சோவியத் ஒன்றியம், கட்சி மாறி, எதியோப்பியாவில் தனது புதிய கூட்டாளியை ஆதரித்தது. அதே ஆண்டில் சோமாலியா எதியோப்பியாவின் ஒகடான் பிரதேசத்தை ஆக்கிரமித்ததையும் அமெரிக்கா ஆதரித்தது. இம் முயற்சி சோவியத், கியூபா ராணுவக் குறுக்கீட்டால் முறியடிக்கப்பட்டது. 1991இல் மெங்கிற்ஸு ஆட்சி கவிழ்ந்தது. அதே ஆண்டு எரித்திரியா நிறுவிய ஒரு இடைக்கால அரசாங்கம், 1993இல் ஒரு சர்வசன வாக்கெடுப்பால் வரன்முறையாக்கப்பட்டது. மெங்கிற்ஸுவுக்குப் பிந்திய எதியோப்பியாவில் ஒரு புதிய கூட்டாளி அதிகாரத்தைக் கைப்பற்றியது முதலாக, அமெரிக்கா, எதியோப்பிய-எரித்திரியத் தகராறுகளில் எதியோப்பியாவின் தரப்பிலேயே இருந்து வருகிறது. அது மட்டுமல்லாது, சோமாலியாவில் தனது பிடியை நழுவவிட்ட பின்பு, அங்கு தனது போர்களை நடத்த அமெரிக்கா எதியோப்பியாவைப் பயன்படுத்துகிறது.

அமெரிக்க நிலைப்பாட்டின் முன்னுக்குப்பின் முரணான தன்மைக்கு காஷ்மீர் பிரச்சனை இன்னொரு குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டாகும். காஷ்மீர மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான வாதம் எப்போதுமே நியாயமான தாகவும் இந்திய ஆக்கிரமிப்புக்குட்பட்ட காஷ்மீரில் இந்திய அரசு மக்களை நடத்தும் விதம் கண்டனத்துக்குரியதாகவும் இருந்துவரும் அதே வேளை, காஷ்மீரில் சர்வசன வாக்கெடுப்புக்கான ஐ.நா. தீர்மானத்தை அமெரிக்கா ஆதரித்துவந்த நோக்கம், பாக்கிஸ்தானுடன் அமெரிக்கா கொண்டிருந்த ராணுவ உறவின் அடிப்படையிலானது. 1990களிலிருந்து இந்தியா அமெரிக்காவுக்கு நெருக்கமாகி வருகிற சூழ்நிலையில் சர்வசன வாக்கெடுப்புக்கான அமெரிக்கா ஆதரவு தேய்ந்து வருகிறது.

பொலிவியா, வெனசுவேலா ஆகிய நாடுகளிலும் பிரிவினைவாத வேலைத் திட்டங்களை அமெரிக்கா ஊக்குவித்து வந்துள்ளது. இப் பிரிவினைவாதம், அவை, வெறுமனே, சில 'திணைக்களங்களில்' (நிருவாக அலகுகளில்) உள்ள செல்வந்தர்கள் தமது பிரதேசங்களின் கனிவளங்களை அரசாங்கம் அடைவதை மறுத்து அவற்றை ஏகாதிபத்தியவாதிகளுடன் கூட்டுச்சேர்ந்து தாங்கள் சூறையாடும் நோக்கிலானவை. பூர்வகுடியினருக்கு இழைக்கப்பட்ட வரலாற்று அநீதிக்கு ஈடுவழங்கி, மக்கள் என்ற முறையில் அவர்களின் பெருமிதத்தை மீட்டெடுக்க பொலிவிய, வெனசுவேல அரசாங்கங்கள் எடுத்துவந்துள்ள முயற்சிகளை ஏகாதிபத்தியமும் செல்வந்தச் சிறுபான்மை யும் எப்போதும் எதிர்த்துவந்துள்ளன. எனெனில், இயற்கை வளங்களையும் மலிவான உழைப்பையும் சூறையாடிவந்த பன்னாட்டுக் கம்பனிகளின் உத்தரவாதப்படுத்திய லாபத்துக்கு அவை தடையாக நின்றன.

எவ்வாறாயினும் பொஸ்னியா, கொஸொவோ, தென் சூடான் அரசுகளின் உருவாக்கத்தில் அமெரிக்காவின் வகிபாகத்தினதும், ஓரளவுக்கு, ஈராக்கில் உள்ள குர்தியத் தேசியவாதிகட்கு (ஆனாற் துருக்கியில் உள்ளோர்க்கல்ல) அமெரிக்க ஆதரவினதும் அடிப்படையில், (இலங்கையிலுள்ள தமிழர் போன் று) சில நாடுகளிலுள்ள சிறுபான்மைத் தேசிய இனத் தலைமைகள் மேற்குல குடன், குறிப்பாக அமெரிக்காவுடன், அணிசேர முனைகின்றன. ஆனாற் பிரிவினைக்குப் பிந்திய பொஸ்னியாவினதோ கொஸொவோவினதோ தென் சூடானினதோ கதியைப்பற்றி எவ்விதமான அறிதலையும் அவர்கள் புலப் படுத்தவில்லை. அதைவிடவும், தேசிய இனங்களின் உரிமைகளை ஆதரித்து அமெரிக்கா பேசுவதன் உண்மையான நோக்கம், குறிப்பிட்ட சில நாடுகளில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவருவது அல்லது மேற்குலகிற்குச் சார்பாகு மாறும் அமெரிக்காவுக்குப் போட்டியாக எழும் சீனா போன்ற நாடுகளுடனோ அமெரிக்காவின் உலக மேலாதிக்க முயற்சியை எதிர்க்கும் ஈரான் போன்ற நாடுகளுடனோ உறவுகளைக் குறைக்குமாறும் நாடுகளைக் கட்டாயப்படுத் தும் நிலைமைகளை உருவாக்குவது என அவர்கள் உணராதுள்ளனர்.

ஏகாதிபத்திய உலகமயமாக்கற் திட்டத்தை ஒப்பேற்றுவதுடன் அமெரிக்க மேலாதிக்கத்திற்குச் சவாலாக அமையாமலும் உள்ளளவும், தன்னைச் சார்ந் துள்ள பெரிய அரசுகளுடன் தனது அலுவல்களை நடத்துவதை விரும்பும் அதேவேளை, வழி விலகமுனையும் எந்தவொரு அரசையும் நிலைதடுமாற்ற, நாட்டினுள்ளும் இருக்கும் எந்த முரண்பாட்டையும் அமெரிக்கா பாவிக்கும். குறுகிய தேசியவாதமும் இனத்துவமும் குலமரபுக் குழுக்களும், நாடுகளி லுள்ள சுரண்டும் வர்க்கங்களினதும் அவர்களுடைய ஏகாதிபத்திய நண்பர்க ளதும் துணையுடன், வலிய பிளவுபடுத்தும் சக்திகளாக உருப்பெற்று வருகின்றன.

1980கள் தொட்டு, ஏகாதிபத்தியம் நேரடியாகவோ மறைமுகமாகவோ — முக்கியமாக சவூதி அராபியாவின் ஊழல்மிக்க, பிற்போக்கு, அடக்குமுறை ஆட்சியை முகவராகக் கொண்டு— இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக் களை ஆதரித்து வந்துள்ளமை நன்கறியப்பட்ட விடயம். இன்றும் இஸ்லாமிய அடிப்படைவாதத்தைப் போரிடுவதைப் பற்றிய வீறார்ந்த பிரகடனங்கட்கு மத்தியிலும், அமெரிக்கா பல நாடுகளில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளுடன் மறைமுகமாகக் கைகோத்துச் செயலாற்றுவதுடன் (2011இல் எகிப்தில் முபாரக் ஆட்சி கவிழ்ந்த பின்னர் போன்று) இஸ்லாமிய அடிப்படைவாதி கட்கும் அதிகாரத்திலுள்ள தன்னைச் சார்ந்தோருக்கும் நடுவே உடன்பாட்டை ஏற்படுத்த வல்லதாகவும் உள்ளது.

ஒடுக்கப்பட்ட ஒரு சிறுபான்மையின் மெய்யான மனக்குறைகளைக் — குறிப்பாக, அச் சிறுபான்மை ஒரு அடக்குமுறை அரசால் விரக்கிக்குட் தள்ளப்படும் போது— தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தித் தன்னுடன் நட்புப் பாராட்டாத ஒரு அரசை இலக்குவைப்பது எந்த ஏகாதிபத்திய அல்லது மேலாதிக்க வல்லரசுக்கும் எளிதாக இயலும். மறக்கக்கூடாதது ஏதெனின், காரியம் கைகூடியதும், அந்நியப் புரவலர் ஒடுக்கப்பட்ட சிறுபான்மையைக் கைகழுவி விடுவார் என்பது தான்.

ஒடுக்கப்பட்ட ஒரு தேசிய இனமோ இனக்குழுவோ குலமரபுக்குழுவோ ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்குமெதிராகத் தன்னைத் தற்காக்கும் நியாயம் மறுக்க இயலாதது. ஆனாற் தனது நியாயத்திற்காகப் போராட ஏகாதிபத்தியத்தினதும் அதன் சர்வதேச முகவர்களினதும் நிழலையும் ஆதரவையும் நாடுவதோ ஒடுக்குமுறையானர்கட்கும் தனக்குமிடையிலான பிணக்கைத் தீர்க்க அவர்களை இடையிட அனுமதிப்பதோ ஒடுக்கப்பட்ட சமூகத்தின் ஒவ்வொரு அடிப்படை உரிமையினதும் பாதுகாப்புக்குத் தீங்கானது. ஏனெனில், நிர்ப்பந்திக்கப்படாமல், ஏகாதிபத்தியம் என்றுமே எந்த மக்கள் திரளினதும் சுயாதிபத்தியத்தை மதித்ததில்லை.

*********

# நண்பர்களும் எதிரிகளும்:
## *உலக அரசியலின் திசைவழிகளும் தமிழ் மக்களின் எதிர்காலமும்*

### *- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ -*

***(இக் கட்டுரை தேசிய கலை இலக்கியப் பேரவையின் தேசிய மாநாட்டு மலரான புது வசந்தம் சிறப்பிதழிலிருந்து நன்றிகளுடன் எடுத்தாளப்படுகிறது.)***

**அறிமுகம்**
சர்வதேச அரசியலோ இராஜதந்திர உறவுகளோ வெறும் கூட்டல் கழித்தல் கணக்கல்ல. அவை எந்தவொரு பொதுச் சூத்திரத்தின் அடிப்படையிலும் விளங்கிக்கொள்ளக் கூடியனவல்ல. அவை தேசநலன்களாலும் தந்திரோபாய, மூலோபாயத் தேவைகளின் அடிப்படையிலும் வழிநடத்தப்படுபவை. ஜெனீவா வில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தமிழ் மக்களுக்கு ஆதரவானதெனவும் அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் இப்போது தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத்தருவதற்காக முன்னெப் போதையும் விட மிகுந்த முனைப்புடன் அக்கறையுடன் செயற்படுகின்றது போன்றதொரு தோற்றங்காட்டப்படுகிறது. இது மிகவும் தவறானது மட்டுமல்ல ஆபத்தானதும் கூட. மூன்று ஆண்டுகட்கு முன் கண்முன்னே நடந்த மனிதப் பேரவலத்தை கண்டும் காணாமல் இருந்தது மட்டுமல்லாது, ஆயதங்களை வழங்கியது முதல் யுத்தத்தை முன்நின்று நடாத்தியது வரை கறைபடிந்த கைகளையுடையவை இதே நாடுகள் தான் என்பதை எம்மில் பலர் வசதியாக மறந்துவிடுகின்றோம்.

சர்வதேசரீதியாக மனித உரிமைகள் பற்றி எவ்வளவு தான் பேசப்பட்ட போதும் நாட்டுக்கும் நாட்டுக்குமிடையான உறவு என்பது அரசிற்கும் அரசிற்குமிடையேயான உறவே ஆகும். அதில் மக்களின் நியாயமான கோரிக்கைகள் அதிகமாக இரண்டாம் பட்சமானதாக்கப்பட்டு விடும். இதனை

விளங்கிக் கொண்டே வெளிநாட்டு அரசாங்கங்களை இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகப் பயன்படுத்துவது பற்றிச் சிந்திக்க வேண்டும். இதில் வீண் கனவு காணக்கூடாது. இது ஜெனீவாவை மையப்படுத்திய அரசியலுக்கு மிகவும் பொருந்தும். போருக்குப் பிந்திய தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் திசைவழியைத் தீர்மானிப்பதில் இவை முக்கியமான சந்திகள். சுயநிர்ணய உரிமைக்குச் சர்வதேச சமூகம் எப்போதும் துணைபுரிவதில்லை. அது தன் நிகழ்ச்சிநிரலுக்குட்பட்டு அதற்கு ஆதரவு போன்று காட்டிக்கொள்ளும். இறுதியில் எப்போதும் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு எதிரான நிலைப்பாட்டையே சர்வதேச சமூகம் எடுக்கும். சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு எதிராகச் செயற்படும் தேசங்களிடம் கெஞ்சிக் கேட்பதற்கு எதுவுமே இல்லை. இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகளை மெதுவான நெகிழ்ச்சியான பார்வைக்கு உட்படுத்துவது அடிமைத்தனமேயன்றிப் போராட்ட உணர்வல்ல. இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளைத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் சுயநிர்ணய உரிமைக்கும் எதிரானவை என்றும் இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகளைத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் சுயநிர்ணய உரிமைக்கும் ஆதரவானவை என்றும் கொள்வது தவறானது. அவ்வாறு விளக்கம் கொடுப்பவர்கள் தெரியாமல் செய்கிறார்கள் என்ற வாதம் கேட்டுப் புளித்துப்போன ஒன்று. அடிப்படையில் அரசியல் இவ்வாறு ஒரு நேர்கோட்டில் பயணிப்பதல்ல. இதனடிப்படையில் நண்பர்களையும் எதிரிகளையும் வரையறுப்பவர்கள் இதை அறியாமற் செய்யவில்லை. அயோக்கியமாகச் செய்கிறார்கள் என்று உறுதியாகச் சொல்லலாம். இப் பின்னணியில் ஈரானின் மீதான அமெரிக்கா வின் நிலைப்பாடு குறித்துத் தமிழ் மக்கள் என்ன நினைக்கிறார்கள் யார் பக்கம் நிற்கிறார்கள் என்பது கேட்க வேண்டிய கேள்வியாகிறது.

எம்மில் எத்தனை பேர் தமிழர் ஒடுக்கப்பட்ட சமூகம் என்பதை ஏற்றுக் கொள்கிறோம்? தழிழர் போல் உலகெங்குமுள்ள ஒடுக்கப்பட்ட சமூகங் களோடு நாம் எம்மைத் தொடர்புபடுத்தியிருக்கிறோமா? ஆண்ட பரம்பரைக் கனவுகளிலிருந்து நாம் இன்னமும் விடுபடவில்லை. எமது தொன்மைகளின் பெருமைகளிலும் புனைவுகளிலும் மூழ்கியிருக்கும் வரை எமக்கு விடிவில்லை. உரிமைக்கான போராட்டம் விடுதலைக்கான போராட்டமாக வளர்ந்து இப்போது இருப்பிற்கே போராட வேண்டிய நிலையில் தமிழ்ச் சமூகம் உள்ளது. இதற்கான பழியைக் குறிப்பாக எவர் மீதும் சுமத்துவது சரியாகாது. தமிழ்ச் சமூகம் தனது விடுதலைக்கான பொறுப்பை முற்றிலும் தன் தோள்களில் சுமக்காதவரை தவறுகள் தவிர்க்க இயலாதவை.

**நண்பர்களும் எதிரிகளும்**

இலங்கையில் சனநாயகமும் மனித உரிமைகளும் பேணப்பட வேண்டும் என்று அமெரிக்கா சொல்வதைத் தமிழர்கட்கு ஆதரவான நிலைப்பாடாகக்

கருதுவது முட்டாள்தனமானது என்பதை நாம் அறிந்திருக்கிறோமா? இலங்கைக்குக் கேடானதும் இலங்கை அரசுக்கு எதிரானதும் தமிழருக்கு நல்லதாக அமைய அவசியமில்லை. அதிலும் முக்கியமாகத் தமிழரைக் காரணங்காட்டிக் குறுக்கிடுகிற எவரும் தமிழரின் நன்மை கருதிக் குறுக்கிடவில்லை என்பதை நாம் நன்கு நினைவிலிருத்த வேண்டும். அதுபோலவே தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் நண்பர்களையும் எதிரிகளையும் நாம் தெளிவாக இனங்காணவேண்டும்.

ஜெனீவாவில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளில் பல 'எந்தவொரு நாட்டிற்கெதிராவும் மனித உரிமை மீறல் தொடர்பில் தீர்மானம் கொண்டுவருவதற்கான தகுதி உலகெங்கும் மனித உரிமை மீறல்களை நடாத்துகின்ற அமெரிக்காவுக்கு கிடையாது' என்பதன் அடிப்படையிலேயே வாக்களித்தன என்பதனை மறக்கலாகாது. வழமை போலவே தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்ததன் மூலம் கியூபா தமிழ் மக்களுக்கு துரோகமிழைத்து விட்டது என்று சொல்லப்படுகிறது. இந்தத் தீர்மானம் குறித்த சில அடிப்படை கள் அறிய அவசியமானவை.

1. மேற்குலகு இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்ற நினைத்தது தமிழ் மக்கள் மீதான அக்கறையாலோ மனித உரிமை மீறல்களை தட்டிக் கேட்கவோ அல்ல. மாறாக இலங்கை அரசைத் தனக்குப் பணிவான அரசாக மாற்றவே.
2. மேற்குலகத் தீர்மானம் நிறைவேறியிருந்தாலும், இலங்கை மேற்குலக நலன்களைப் பேண ஒத்துழைக்குமிடத்துத், தீர்மானம் எவ்விதமான செயல் வடிவையும் எடுத்திராது என்பதை உறுதியாகச் சொல்லலாம்.
3. ஐ.நா.வோ எந்த மேற்கு நாடுமோ உண்மையிலேயே விரும்பியிருந் தால் இலங்கையில் நிகழ்ந்த போர்க் குற்றங்கள் பற்றிய விசாரணை களைத் தொடக்கியிருக்கலாம். அவர்களது நோக்கம் அதுவல்ல.

இனிக் கியூபாவின் நிலைப்பாட்டுக்கு வருவோம்.

1. நீண்டகாலமாக மனித உரிமைகளின் பெயரில் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் உள் விடயங்களில் அமெரிக்கா தொடர்ச்சியாகத் தலையிட்டு வந்துள்ளது.
2. ஒரு பக்கம் தனக்கெதிரான ஆட்சிகளை கவிழ்ப்பது, தனக்கெதிரான ஆட்சிகள் உள்ள நாடுகளில் பிரிவினைவாதத்தைத் தூண்டித் தலையிடுவது என இலத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்கா பல காலமாய்ப் பல அநியாயங்களைச் செய்துள்ளது.
3. எண்ணிலடங்கா மனித உரிமை மீறல்களை உலகமெங்கும் செய்வதுடன் சர்வதேசச் சட்டங்களைத் துளியும் மதிக்காத நாடான அமெரிக்கா எவ்வாறு இன்னொரு நாட்டுக்கெதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை முன்வைக்க முடியும்?

4. கியூபாவின் நடவடிக்கை, வெறுமனே இலங்கை என்பதற்கப்பால் அமெரிக்க நோக்கங்களைத் தூர நோக்கில் மதிப்பிட்டு எடுக்கப்பட்ட தற்காப்பு நடவடிக்கையென்றே எண்ணத் தோன்றுகிறது.

பாதிக்கப்பட்டோர் என்ற வகையில், தமிழர் கியூபா மீது மனத் தாங்கலடைவது விளங்கிக் கொள்ளக் கூடியது. ஆனால், எந்தத் தமிழ்த் தலைமையாவது இதுவரை அமெரிக்காவினதும் பிற மேற்கு நாடுகளதும் கொடுமைகட்குட்பட்ட நாடுகட்கு ஆதரவாக இல்லாவிடினும் அனுதாபமாகவாவது குரல் கொடுத்ததுண்டா? இன்னமும் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் பின்னால் அலைகிற போக்கல்லவா தொடர்கிறது. இலங்கை அரசாங்கத்தின் நோக்கங்கள் என்னவானாலும், எவ்வாறோ அது மூன்றாமுலகில் நட்புச் சக்திகளை வைத்திருக்கிறது. நாம் என்றுமே நட்பை நாடாதவர்களிடம் நிபந்தனையற்ற ஆதரவைக் கோருகிறோம். நம் ஆதரவை வலிந்து வழங்கினோரின் துரோகங்களை மட்டுமன்றிக் கொலை பாதகங்களையும் மன்னித்து விடுகிறோம். தமிழருக்கெதிராக ராணுவ உதவி வழங்கிய நாடுகளில் அமெரிக்கா, இந்தியா, சில ஐரோப்பிய நாடுகள், இஸ்ரேல் என்பன முதன்மையானவை. பாக்கிஸ்தானும் சீனாவும் ரஷ்யாவும் வெகுதுரம் பின்னால் வருவன. கியூபாவோ லத்தின் அமெரிக்க இடதுசாரி ஆட்சிகளோ நமக்கு எக் கேடும் செய்யாதவை என்பது கவனிக்கத் தக்கது.

இன்று உலகெங்கும் பரந்துவிரிந்துள்ள விடுதலைப் போராட்டங்களில் எவற்றையெல்லாம் தமிழ் மக்கள் ஆதரிக்கிறார்கள்? ஒடுக்குவோரும் ஒடுக்கப்படுவோரும் நிறைந்திருக்கின்ற உலக அரசியல் அரங்கில் தமிழர்கள் எந்தப்பக்கம் நிற்கிறார்கள்? உலகில் மிகவும் நீண்டகாலமாக தொடருகின்ற பலஸ்தீன விடுதலைப்போராட்டத்தில் தமிழர்கள் யாரை ஆதரிக்கிறார்கள்? அமெரிக்கா இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானமொன்றை நிறைவேற்றியது தமிழர்கள் சார்பில் என்றால் ஏன் அதே அமர்வில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இஸ்ரேலிற்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களுக்கு எதிராகவும் இஸ்ரேலிற்கு ஆதரவாகவும் அமெரிக்கா வாக்களித்தது? அமெரிக்கா உரிமைப் போராட்டங்களில் யார்பக்கம் நிற்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணம் மட்டுமே. பலஸ்தீன மக்களை அவர்களது தாயக பூமியில் இருந்து விரட்டி அதனை இஸ்ரேலின் நிலங்களாக மாற்றுவதே அமெரிக்க-பிரித்தானிய-இஸ்ரேல் சியோனிசத்தின் அடிப்படைத் திட்டமாகும். கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக மத்திய கிழக்கிலே இடம் பெற்று வரும் போராட்டத்தினதும் போரினதும் இரத்தப் பெருக்கினதும் அகதி வாழ்வினதும் மையப் புள்ளி அதுவேயாகும். பலஸ்தீன மக்களது வீரம் செறிந்த போராட்டத்தை இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாலும் அதற்கு உதவி நிற்கும் அமெரிக்க மேற்குலக சக்திகளாலும் முறியடிக்க முடியவில்லை. இன்று பலஸ்தீனத்தில் ஏற்பட்டுள்ள அவல நிலை சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் ஒவ்வொரு நாட்டின் நேர்மையான விடுதலை அமைப்புகளுக்கும்

ஒடுக்குமுறைக்கு உள்ளான மக்களுக்கும் ஒரு சமகால அனுபவமும் படிப்பதற்குரிய பல விடயங்களைத் தருவதாகவும் உள்ளது.

இத்தகைய கேடுகெட்ட அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் சியோனிச இஸ்ரேலையும் நம்பி அல்லது முன்னுதாரணமாகக் கொண்டு அல்லது உதவிகளைப் பெற்று சுயநிர்ணய உரிமை அடிப்படையில் வெற்றி கொள்ளலாம் என்பது நடக்கக் கூடிய காரியமல்ல. அது மட்டுமன்றி அத்தகைய அந்நிய ஏகாதிபத்திய சக்திகள் எமது மக்களின் இரத்தத்திலும் கொலைகளிலும் அகதி வாழ்விலும் தமது தமது தேவைகள் நலன்களை ஈட்டிக் கொள்ள முனைந்து கொள்வர் என்பதையே பாலஸ்தீனத்தின் இன்றைய இன்றைய நிலை நமக்கு உணர்த்துகிறது.

இன்று ஈரானில் நடப்பதென்ன? ஈரான் தனது அணுசக்தியை விருத்தி செய்யவும் அணு உலைகளில் பயன்பட்ட யூரேனியத்தைச் செறிவுபடுத்தி மீண்டும் பயன்படுத்த ஆய்வுகளை நடத்தவும் கூடாது என அமெரிக்கா சொல்கிறது. ஈரான் அணு ஆயுதத் தயாரிப்புக்கு ஆயத்தப்படுத்துகிறது என்பதே அமெரிக்காவினதும் இஸ்ரேலினதும் குற்றச் சாட்டாகும். ஈரானின் அணுசக்தி விருத்தி முயற்சிகளைத் தடுக்க எந்த உலக நாட்டுக்கும் உரிமையில்லை. ஈரான் அணு ஆயுத உற்பத்தித் திட்டமிடுகிறது என்று குற்றச்சாட்டுகிற இஸ்ரேல் இன்று நானூறுக்கும் மேற்பட்ட அணு குண்டுகளைத் தன்வசம் வைத்திருக்கிறது. அது பற்றி எதுவுமே பேசாத அமெரிக்காவுக்கு ஈரானைக் கண்டிக்க என்ன உரிமை உள்ளது? அமெரிக்கா, ரஷயா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ் ஆகிய நாடுகளிடம் பல காலமாகவே அணு ஆயுதங்கள் இருக்கின்றன. இந்தியாவும் பாக்கிஸ்தானும் அணு ஆயுத உற்பத்தியில் புதிதாக இறங்கி அவையும் அவற்றைக் கொண்டிருக்கின்றன. அமெரிக்காவின் மிரட்டலின் பின்னணியிலேயே வட கொரியா தற்காப்பிற்காக அணு ஆயுதத் தயாரிப்பில் இறங்கியது என்பது கவனிக்க வேண்டியது. இப்போது ஈரானின் மீதான அமெரிக்காவின் அதீத அக்கறை வேறு நோக்கங்களைக் கொண்டது. ஈரானின் மீதான அமெரிக்க ஆதிக்கத்திற்கு அறுபது வருடங்களுக்கு முன்னமே அத்திவாரமிடப்பட்டது. ஈரானின் ஆட்சித் தலைவர் மொஸாடெக் படுகொலையின் பின்பு அமெரிக்க-பிரித்தானிய முயற்சி மூலம் ஈரானில் முடியாட்சியொன்று நிறுவப்பட்டது. அதைப் போன்ற பயங்கரமான சர்வதிகாரக் கொடுங்கோன்மை ஆசியாவில் வேறெதுவும் இல்லை எனுமளவுக்கு, அந்த ஆட்சி சகல எதிர்ப்பாளர்களையும் கடுங்கண்காணிப்பு, ஆட்கடத்தல், சித்திரவதை, கொலை என்பன மூலம் கட்டுப்படுத்தியது. அந்த ஆட்சி கொமெய்னி தலைமையிலான இஸ்லாமியப் புரட்சியால் 1978ல் தூக்கி எறியப்படும் வரை ஈரான் அமெரிக்காவின் நெருங்கிய கூட்டாளியாகவே இருந்தது. ஈரானின் இஸ்லாமிய மதவாத ஆட்சியின் தவறுகள் காரணமாக கணிசமானளவில் மக்கள் அதை வெறுத்தாலும் அந்த ஆட்சியை கவிழ்க்க ஈராக்- ஈரான் போரின் போது சதாமுக்கு ஆதரவு உட்பட அமெரிக்கா எடுத்து வந்த

நடவடிக்கைகள் முடிவில் இஸ்லாமிய மதவாதிகளின் கைகளையே வலுப்படுத்தின. ஈரானின் பொருளாதாரம் அமெரிக்காவின் நெருக்குவாரங் களால் ஒரு புறமும் ஈரானிய ஆட்சியின் பழைமைவாதப் போக்கால் இன்னொரு புறமும் பல சிக்கல்களை எதிர்நோக்கினாலும் ஈரான் ஆசியாவின் வலுவான ஒரு நாடாக வளர்ந்துள்ளது. மத்திய கிழக்கில் அமெரிக்க ஆதிக்கத்திற்குத் தடையாகவும் சீனாவைச் சுற்றி வளைத்துத் தனிமைப் படுத்தும் முயற்சிக்கும் தடையாகவும் உள்ள முக்கியமான ஒரு நாடு ஈரான். ஈரானில் ஒரு அமெரிக்கச் சார்பு ஆட்சியை நிறுவும் முயற்சி தோல்வி கண்ட பின்பே ஈரான் பற்றிய கடும் போக்கை அமெரிக்கா மேற்கொண்டது. ஈரானுக்கு எதிரான கடும் போக்கு முஸ்லீம் மதவாதச் சனாதிபதி அஹ்மெடி நெஜாடின் தெரிவின் பின்பு தீவிரமாகியது.

ஈரானை ஐ.நா. பாதுகாப்புச் சபை மூலம் விசாரணைக்குட்படுத்தி அதன் அணுசக்தித் திட்டங்கட்கு முற்றுப்புள்ளி வைப்பது அல்லது ஈரானைப் பலவாறான வணிகத் தடைகட்குட்படுத்திப் பலவீனப்படுத்துவது தான் அமெரிக்க-இஸ்ரேலிய நோக்கமாகும். தமது பொருளாதார நலன்கட்காக ஈரானுடன் வணிக உறவைப் பேண வேண்டிய நிலையிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஒருபுறம் அமெரிக்காவுடன் சேர்ந்து ஈரான் மீது நெருக்குவாரங்களைப் பிரயோகிக்கின்றன. மறுபுறம் ஈரானுடன் சமரசத்துக் கான வழிகளைத் தேடுகின்றன. ஈரானின் அணுசக்தி விருத்திக்கு உதவி செய்துவந்த ரஷ்யாவும் சமரச முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. சீனா இப் பிரச்சனை பாதுகாப்புச் சபைக்குப் போவதை விரும்பவில்லை. இந்நிலையில் அமெரிக்கா புதிய வழிமுறைகளைத் தேடவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. இதன் பின்னணியிலேயே நாம் நண்பர்கள் பற்றியும் எதிரிகள் பற்றியும் சிந்திக்க வேண்டும். எந்தவொரு விடுதலைப் போராட்டத்திற்கும் நட்புச் சக்திகள் அவசியமானவை. ஆனால் அவற்றிற்கிடையிலான உறவு ஈவோருக்கும் இரப்போருக்கும் இடையிலான உறவாக இருக்க முடியாது. அவ்வாறான உறவு நிச்சயமாக நட்பாக இருக்கமுடியாது. இதை நாம் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில் சீனப் பூச்சாண்டி நீண்டகாலமாகக் காட்டப்பட்டு வருகிறது. தமிழ் அரசியல் தலைவர்களாலும் தமிழ்த் தேசியவாதத்தால் வழிநடத்தப்படுகின்ற தமிழ்ப் பத்திரிகைகளாலும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்குச் சீனா மிகப்பெரிய எதிரி என்றும் அது திபெத்திய விடுதலைப் போராட்டத்தை கொடுமையாக ஒடுக்கிறது என்றும் தொடர்ந்தும் சொல்லப்பட்டு வருகிறது. சீனா இலங்கை அரசாங்கத்துடன் செயற்படுவதை தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படுவதாகக் காட்டுவதில் தமிழ்ப் பத்திரிகைகள் முன்னணியில் செயற்படுகின்றன. இலங்கை அரசுக்குப் போரின்போது ஆயதங்களையும் போர்த் தொழில்நுட்பத்தையும் புலனாய்வுத் தகவல்களையும் செய்மதிப் படங்களையும் வழங்கியவர்களில் முன்னிலை யில் இருப்பன அமெரிக்காவும் இந்தியாவும் பிரித்தானியாவுமே என்பதை

நாம் வசதியாக மறந்துவிடுகிறோம். சீனா தான் முதல் எதிரி போற் சித்தரிக்கப்படுகிறது. இதைச் செய்பவர்கள் தங்கள் இந்திய-அமெரிக்க விசுவாசத்தைக் காட்டவே இவ்வாறு செய்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வது பயனுள்ளது. சீனா எந்த நாட்டையுமோ எந்த ஒடுக்கப்பட்ட மக்களையுமோ விடுவிக்க வேண்டும் என்று எந்த உண்மையான இடது சாரியும் என்றுமே எதிர்பார்த்ததில்லை. அப்படி எதிர்பார்த்திருந்தால் அது அடிப்படையிலேயே தவறானது. எந்த மக்களது விடுதலையும் முற்றிலும் அவர்களது கையிலேயே தங்கியுள்ளது. எந்த அயல்நாட்டையும் “சர்வதேச சமூகத்தையும்” எதிர்பார்த்திருப்பது பயனற்றது மட்டுமல்ல மிகவும் கேடானது மாகும்.

சீனாவின் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படையானது வெவ்வேறு அரசுகட்கிடையான உறவு, வெவ்வேறு நாட்டு மக்களுக்கிடையிலான உறவு, வெவ்வேறு நாடுகளின் கம்யூனிஸ்ற் கட்சிகளுக்கிடையிலான உறவு, என்ற மூன்று தளங்களில் அமைந்திருந்தது. 1950களில் நாடுகளுக்கிடையிலான உறவை 5 அம்ச அடிப்படையில் சீனா வகுத்துக் கொண்டது: (1) நாடுகளது இறைமையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பரஸ்பரம் மதித்தல், (2) பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை, (3) ஒரு நாடு மற்றதன் உள் அலுவல்களில் தலையிடாமை, (4) சமத்துவமும் பரஸ்பர நன்மையும், (5) சமாதானமாக உடனிருத்தல். இக் கோட்பாடுகளே பின்னர் அணிசேரா நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச உறவுகட்கான அடிப்படையாயிற்று என்பதை யும் குறிப்பிடல் தகும். சீனாவின் வெளியுறவுக் கொள்கையின் தன்மையை அது உலக அலுவல்களில் எவ்வாறு நடந்துகொண்டுள்ளது என்பதை நோக்குவதன் மூலம் மதிப்பிடலாம்.

1. சீனா எந்தச் சுதந்திர நாட்டினதும் இறைமையை மதித்தே நடந்து வந்தது. எந்த நாட்டிலும் ”ஆட்சி மாற்றம்“ ஒன்றைச் சீனா பரிந்துரைத்ததில்லை. அதற்கான காரியங்களில் இறங்கியதுமில்லை.
2. சீனா கொலனிய எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு நோக்குடைய விடுதலைப் போராட்டங்களை நிபந்தனையின்றி ஆதரித்து வந்தது. அதேவேளை, தான் ஆதரித்த விடுதலைப் போராட்டம் வெற்றிபெற்ற பின்பு யார் ஆட்சி அமைக்கவேண்டும் என்று எங்கேயும் எவரையும் வற்புறுத்தியதில்லை.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் ஆதரவுச்சக்திகள் என தமிழ்த் தேசிய வாதிகளும் தமிழ் அரசியல் தலைமைகளும் பரிந்துரைக் கின்ற அமெரிக்காவும் இந்தியாவும் மேற்சொன்ன இரண்டு விடயங்களிலும் எவ்வாறு செயற்பட்டுள்ளன, அவை இரண்டினதும் வெளியுறவுக்கொள்கைகள் எவ்வாறு இருந்துள்ளன என்பவற்றை நோக்கினால் தமிழ் மக்களின் நட்புச் சக்திகள் பற்றி புதிய முடிவுகளுக்கு வர இயலும் என்பதோடு ‘சீன மிரட்டல்’ என்பதன் பின்னான அரசியலையும் விளங்கிக்கொள்ள இயலும். இவை யனைத்தையும் விடக் கவனிக்க முக்கியமான ஒரு விடயம் உள்ளது. சீனா

இன்று வரை வேறெந்த நாட்டின் மண்ணிலோ கடற்பகுதியிலோ தனது படைத்தளம் எதையும் நிறுவவில்லை என்பதுடன், வேறு நாடுகளின் பிரச்சினைகளை தீர்க்கிற போரிற்கூட இதுவரை சீனாவின் படைகள் அயல்நாடுகளில் நிலைகொண்டு இருந்ததில்லை. இது சீனாவை மற்ற எந்த வல்லரசினின்றும் வேறுபடுத்திக் காட்டுகிறது. சீனா இதுவரை இராணுவ மிரட்டல் மூலம் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொண்டதும் இல்லை. பிற நாடுகளை, முக்கியமாக வலிமை குறைந்த நாடுகளை வலிந்து மிரட்டுவதைச் சீனா எப்போதுமே நிராகரித்து வந்துள்ளது.

திபெத்திய மக்கள் மத உரிமையோ மொழி உரிமையோ பண்பாட்டு உரிமையோ மறுக்கப்பட்ட ஒரு தேசிய இனமல்ல. திபெத்திய மக்களின் வாழ்க்கைத் தரமோ சமூக நலன்களோ சமூக மேம்பாட்டுக்கான வாய்ப்புக் களோ சீன மத்திய அரசாலோ பேரினாவாத அரசியலாலோ மறுக்கப் படவில்லை. சீனக் குடியரசு நிறுவப்பட்டபோதே ஹான் பேரினவாதம் பற்றி எச்சரிக்கப்பட்டு சிறுபான்மைச் சமூகங்களின் அடையாளம் முதலான சகல உரிமைகளும் பேணப்படும் தேவை வற்புறுத்தப்பட்டது. இதுவரை அந்த நிலையில் மாற்றமில்லை. திபெத்திய மக்கள் என்றென்றைக்கும் சீனாவின் ஒரு சிறுபான்மைத் தேசிய இனமாக வாழவிரும்புவர் என்பதற்கு உத்தர வாதம் எதுவும் இல்லை. அது சீனாவின் ஹான் தேசிய இனம் பேரினவாத அடக்குமுறையில் ஈடுபடுகிற போதும் திபெத்தியரது சுயாட்சி உரிமைகள் பாதிக்கப்படுகிற போதுமே நடக்கக் கூடியது. திபெத்தில் அவ்வாறான நிலைமை இல்லை. திபெத்தினுள் குறுகிய இனவாதம் இருக்கலாம். தேசிய இனங்களிடையிலான பல்வேறு முரண்பாடுகள் இருக்கலாம். எனினும் ஒரு திபெத் தேசிய விடுதலைக் கோரிக்கைக்கோ இயக்கத்திற்கோ இதுவரை திபெத்தினுள் தேவை ஏற்படவில்லை. அவ்வாறான தேவை திபெத்திற்கு வெளியே திபெத்திய மக்களை ஒடுக்கிக் கொடுமை செய்து தமது அதிகாரம் கைநழுவிப் போனதால் கிளர்ச்சியில் ஈடுபட்டு அது தோற்றதால் வெளியேறினோரின் பரம்பரையினருக்கு இருக்கிறது. அவர்களைப் பராமரித்து ஊக்குவிக்கிற அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு இருக்கிறது. அமெரிக்காவுடன் கூட்டாளிகளாக உள்ள பிற்போக்குவாதிகட்கும் இருக்கிறது. அவர்களில் எவரும் வேண்டுவது விடுதலை அல்ல. எந்தவொரு விடுதலைப் போராட்டத் திற்கும் நட்புச்சக்திகள் மிக அவசியமானவையே. ஆனால் அது எவ்வாறான நட்பு என்பது முக்கியமானது. பொருந்தாநட்பு பல சமயங்களில் போராட்டங்களின் திசைவழிகளையே தடம்மாற்றும் தன்மையுள்ளது என்பதை நாம் நமது வரலாற்றினூடே கண்டிருக்கிறோம்.

**சுயநிர்ணய உரிமையும் சர்வதேச சமூகமும்**

மூன்றாம் உலக நாடுகள் பலவற்றில் கடந்த மூன்று தசாப்தங்களாகத் தேசிய இனப் பிரச்சினை என்பது தீவிரமடைந்து ஆயுதப் போராட்டங்களாக விருத்தி பெற்று வந்துள்ளதைக் காணலாம். தேசிய இனங்கள் மீதான

பெருந் தேசிய இன அகங்கார ஒடுக்கு முறையை ஆளும் வர்க்கப் பெரும் தேசியவாத சக்திகள் கட்டவிழ்த்து வந்திருக்கிறார்கள். இதனை எதிர்த்து சுயாட்சிக் கோரிக்கைகளும் அதற்கு அப்பாலான பிரிவினைக் கோரிக்கை களையும் போராடும் தரப்புகள் முன்வைத்து வந்துள்ளன. இத்தகைய இன மதத் தேசிய முரண்பாடுகளையும் ஒடுக்குமுறைச் சூழலையும் தத்தமது ஏகாதிபத்திய வல்லாதிக்க நோக்கங்களுக்குத் தகுந்தாற் போல அச் சக்திகள் பயன்படுத்தியும் வந்துள்ளன. தேசிய இனப் பிரச்சினை யுத்தமாகவும் ஆயுதப் போராட்டமாகவும் காணப்படும் சூழல் பெரும்பாலான நாடுகளில் பிரதான முரண்பாட்டுப் பிரச்சினையாகி நாளாந்த உயிரிழப்புக் களையும் இரத்த ஆறு ஓடுவதையும் வேகப்படுத்தி நிற்கின்றது.

இவ்வாறான தேசிய இனப் பிரச்சினை விடயத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளடங்கி இருப்பதைக் காண முடிகின்றது.

1. ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமக்கான சுயாட்சி உரிமைகளைக் கோரி நிற்பது நியாயமானதும் ஏற்றுக்கொள்ளத் தக்கதுமான ஒரு அம்சமாகும்.
2. அதே வேளை, மோதற் சூழலை வலிந்து உருவாக்கி ஏகாதிபத்திய சக்திகளின் துணையுடன் அவர்களது உள் நோக்கங்களுக்கு ஏற்பப் பிரிவினையைச் சாத்தியமாக்க முன் நிற்பது, ஏற்றுக் கொள்ள முடியாத பிற்போக்கான இரண்டாவது அம்சமாகும்.

இவ் விடயத்தில் தான் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கு ஐக்கியப்பட்ட ஒரு நாட்டிற்குள் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சியா அல்லது துண்டாடப் படும் தனி நாடா என்பது சிந்தனைக்கு உரியதாகின்றது. இதனை நாட்டு நலன், மக்கள் நலன், ஒடுக்கப்படும் வர்க்கங்களின் நலன், ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் வாழ்வும் மேம்பாடும் என்பனவற்றின் அடிப்படையில் வைத்து நோக்குதல் வேண்டும். இவற்றுடன் உலக மேலாதிக்கத்திற்கும் பிராந்திய மேலாதிக்கத்திற்கும் பேரவாக் கொண்டு அலைந்து வரும் வல்லாதிக்க சக்திகளையும் கணக்கிற் கொண்டே பிரிவினையா சுயாட்சியா என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

கொசோவோ தனி நாட்டுப் பிரகடனமும் அதற்கான அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் அங்கீகாரமும் தனித் தமிழீழத்திற்கான புதிய முன்னுதாரணமாகக் காட்டப்படுகிறது. முன்னர் இஸ்ரேல், வங்கதேசம் எனப் பலவும் காட்டப்பட்டு வந்ததை இங்கு நினைவுகூர்வது தகும். சேர்பியர்கள் பெருந்தேசிய மேலாதிக்கவாதிகள் என்பதனாலேயே யூகோஸ்லாவியா உடைந்தது என்றும் சேர்பியர்களின் தேசிய இனவெறியாலேயே கொசோவோ பிரிந்து செல்ல நேர்ந்தது என்று மிகையான எளிமைப்படுத்தப்பட்ட ஒரு புனைவை நாம் மீண்டும் மீண்டும் கேட்கிறோம். யூகோஸ்லாவியாவின் விடயத்தில் அந்த நாடு ஸ்லாவ் தேசிய இனங்கள் பலவற்றின்

ஒன்றிணைவால் உருவான நாடு என்பதும் அங்கே எவ்விதமான தேசிய இன ஒடுக்கலும் இருந்ததில்லை என்பதும் பலருக்கு நினைவுக்கு வருவதில்லை. அங்கே இருந்துவந்த தேசிய இனங்களிடையே போட்டி இருந்தது. இடையிடை பகைமையான உணர்வுகளும் இருந்தன. ஆனால், அது 1990கள் வரை மோதல்கட்கோ பிரிவினைக்கோ இட்டுச் செல்லவில்லை. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. மிக மோசமான பொருளாதார நெருக்கடி இருந்து வந்த 1980களிலும் பிரிவினைக்கான இயக்கங்கள் உருப்பெறவில்லை.

மதத்தாலும் மொழிப் பிரிவுகளாலும் இனப் பிரிவுகளாலும் வேறுபட்ட யூகோஸ்லாவியத் தேசிய இனங்களைப் பிரிப்பதில் கத்தோலிக்கத் திருச்சபைக்கும் ஜேர்மனிக்கும் பயன் இருந்தது. ஆனாலும், யூகோஸ் லாவியாவில் தன்னுடைய படைகளை நிலைநிறுத்த திட்டமிட்டிருந்த அமெரிக்காவுக்கு (பொஸ்னியா என்றே பலராலும் அழைக்கப்படும்) பொஸ்னியா-ஹெர்ட்ஸகொவினா வாய்ப்பான ஒருஇடமாயிற்று. அங்கே பிரிவினை தூண்டிவிடப்பட்டது.

ஜேர்மனிய, வத்திக்கான் ஊக்குவிப்புடன் ஸ்லொவீனியாவும், குறோவேஷி யாவும் யூகோஸ்லாவிய சமஷ்டியினின்று பிரிந்துபோக முற்பட்டபோது யூகோஸ்லாவியக் குடியரசுத் தலைவரான மிலொஷோவிச் சேர்பியப் பேரினவாதியாகத் தன்னை அடையாளப்படுத்தவில்லை. மாறாக யூகோஸ் லாவியா தொடர்ந்தும் ஒன்றுபட்ட நாடாக இருக்கும் தேவையையே வற்புறுத்தினார். குறோவேஷியப் பிரிவினையின் போது மேலைநாட்டுச் சார்பான நிலைப்பாட்டை எடுத்த அதன் தலைவர் துஜ்மன் பின்னர் சேர்பியர் கட்கு எதிரான இனத் துவேஷத்தை கட்டவிழ்த்து விட்டார். அதுமட்டுமன்றிக் குறோவேஷியாவினின் க்றயினா மாகாணத்திலிருந்து இரண்டரை இலட்சம் சேர்பியர்கள் ‘இனச் சுத்திகரிப்புக்கு’ உள்ளாயினர்.

பொஸ்னியாவில் பொஸ்னிய முஸ்லிம் மேலாதிக்கச் சிந்தனையுடைய அலியா இஸெத்பெகோவிச் அமெரிக்க ஆதரவுடன் பொஸ்னியாவின் மூன்று தேசிய இனங்கள் மீதும் ஆதிக்கம் செலுத்த முற்பட்டார். அக் காலத்தில் அமெரிக்கா முஸ்லிம் தீவிரவாதத்தை வளர்த்து வந்தது என்பதையும், சோவியத் யூனியன் உடைவதை ஊக்குவித்ததும் போதாமல், முஸ்லிம் தீவிரவாதிகளைக் கொண்டு ரஷ்யாவை மேலும் பலவீனப்படுத்துகிற பணிகளிலும் தீவிரம் காட்டியதையும் நாம் நினைவிலிருத்த வேண்டும்.

இத்தகைய பின்னணியிலேயே சொஸ்னியாவில் சேர்பிய, குறோவேஷிய, முஸ்லிம் தேசிய இனங்களிடையிலான மோதலுக்கான நிலை உருவானது. இம் மூன்று சமூகங்களும் மதத்தால் மட்டுமே வேறுபட்ட ஒரே சேர்ப் இனத்தவர் என்பதும் மதம் சார்ந்த அரசியலும் அந்நிய ஆக்கிரமிப்புமே மூன்று சமூகங்களையும் வெவ்வேறாக்கின என்பதும் நாம் நினைவிலிருத்த வேண்டிய உண்மைகளாகும். எனினும், இன்னொரு முறை நடந்த அந்நியக்

குறுக்கீட்டின் மூலம் பொஸ்னிய சரித்திரம் மூன்று சமூகங்களிடையிலும் மும்முனைப் போராட்டமாக வெடித்தெழ நேர்ந்தது. இதன் விளைவுகளில் சேர்பிய இனத்தவரது குற்றங்கள் மட்டுமே பேசப்பட்டதுடன் அவை மிகைப் படுத்தப்பட்டு அதே பொய்கள் இன்னும் திரும்பத் திரும்பக் கூறப்படுகின்றன. சேர்பியாவையும் மொண்டி நெக்ரோவையும் மசிடோனியாவையும் கொண் டிருந்த எஞ்சிய யூகோஸ்லாவியா எவ்வகையிலும் பொஸ்னியாவிற் குறுக்கிட இயலாதவாறு தடைகட்கு உட்படுத்தப்பட்டிருந்தது. எனவே, மிலொஷோவிச் பொஸ்னியாவின் இரத்தக் களரிக்குப் பங்களித்தவரல்ல. எனினும் வெளி உதவியுடன் சேர்பியர்கள் மீதும் முஸ்லிம்கள் மீதும் குறோவேஷிய இனத் தீவிரவாதிகள் நடத்திய வெறியாட்டம் பற்றிப் பேசப்படுவதில்லை. முஸ்லிம் தீவிரவாதிகளுடைய குற்றங்களும் பேசப்படுவதில்லை. சேர்பியர்கள் பொஸ்னியாவில் அமெரிக்கா, நேட்டோ, ஐ.நா. எனும் மூன்று அந்நிய சக்திகளை எதிர்கொண்டனர். அதனால் அவர்களது மனித உரிமை மீறல்கள் நியாயமாகிவிடாத போதிலும், அவர்களை மட்டுமே குற்றவாளிகளாக்குவது தவறான நோக்கமுடையது.

கொசோவோவும் வொய்வொதினாவும் சேர்பியாவின் சுயாட்சி மாகாணங்கள். அங்கு வலுவான சுயாட்சிகள் இருந்தன. கொசோவோவில் ஒரு கணிசமான சேர்பிய சிறுபான்மை இருந்தது. சோவியத் யூனியனின் சரிவிற்குப் பின்னரே அங்கு கொசோவோ தேசியவாதம் கிளறிவிடப்பட்டது. கொஸொவோ தீவிரவாத இயக்கம் ஒன்று சேர்பியாவின் ‘சோஷலிஸ’ ஆட்சியைப் பலவீனப்படுத்துகிற நோக்குடன் அமெரிக்காவால் ஆயதபாணி யாக்கப்பட்டது. சேர்பியப் படைகட்கும் அமெரிக்கா ஆதரவு பெற்ற தீவிரவாதிகளுக்கும் மோதல்கள் வலுத்த போதும் கொசோவோவில் இனப் படுகொலைகள் நடக்கவில்லை. எப்போது நேட்டோ சேர்பியா மீது குண்டு வீச்சைத் தொடங்கியதோ அப்போதுதான் கொசோவோ அல்பேனியர் மீதான தாக்குல்கள் நிகழ்ந்தன. கொசோவோவின் சேர்பியர்கள் விரட்டப்பட்டது பற்றி அதிகம் பேசப்படுவதில்லை.

ரஷ்யா மீள எழுச்சி பெற்று வருகிற நிலையில், ஒரு வலுவான சேர்பியாவை அமெரிக்கா விரும்பவில்லை. சேர்பியாவை பூரண அமெரிக்க ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்து ரஷ்யாவுக்கு எதிராகப் பாவிக்க இயலாததாலேயே, முதலில் மிலொஷொவிச்சைப் பலவீனப்படுத்தப் பாவிக்கப்பட்ட கொசோவோ தீவிரவாதம் நாட்டைப் பிரிக்கும் அளவுக்குப் போக அனுமதிக்கப்பட்டது. பாதுகாப்பின்பேரில் இன்று பொஸ்னியாவில் இன்னமும் அந்நியப் படைகள் உள்ளன. நாடு இன்னமும் பொருளாதாரத்தில் பின்தங்கியே உள்ளது. கொசோவா இன்று தனி நாடாகிக் கொள்வதற்கு அங்கு புகுந்து கொண்ட நேட்டோப் படைகளின் பிரசன்னம் அடிப்படையாக இருந்தது. ஆனால் இன்றும் அப்படைகள் இருக்கவே செய்கின்றன இனியும் அவை இருக்கவே போகின்றன. இதில் உள்ளடங்கி உள்ள உண்மை என்னவெனில் அமெரிக்காவும் பிற வல்லாதிக்க சக்திகளும் பிரிவினையை

ஆதரிப்பது அல்லது எதிர்ப்பது என்பதன் அர்த்தம் அவர்களது பொருளாதார அரசியல் ராணுவ நலன்களின் அடிப்படையிலேயே ஆகும். சம்மந்தப்பட்ட மக்களின் நலன்களில் இருந்தல்ல.

மாக்ஸியவாதிகள் தேசங்களின் பிரிவினையை ஆதரிக்குங் காரணங் களுஞ் சூழ்நிலைகளும் தேசியவாதிகள் எனப்படுவோரின் நிலைப்பாடுகட்கு முற்றிலும் உடன்பாடானவையல்ல. மாக்ஸியவாதிகளது அணுகுமுறை வர்க்க முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்டது; சர்வதேசப் பார்வையுடையது. தேசிய இனக்கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளைச் சினேக முரண்பாடுகளாகக் கருதுவது.

தேசியவாதிகளது அணுகுமுறை ஒரு தேசத்தினதோ, தேசிய இனத் தினதோ நலன்கள் என்று தாம் கருதும் விஷயங்களை முதன்மைபடுத்துவது. எனவே அது தேசங்களிடையிலும் தேசிய இனங்களிடையிலும் உள்ள முரண்பாடுகளை முக்கியப்படுத்தி ஒரு தேசிய இனத்தின் நலன்கள் மற்றைய இனங்களின் நலன்களைவிட முக்கியமானவை என்று கருத இடமுண்டு. தேசிய இனங்கள் இரண்டின் அதிகார வர்க்கங்களிடையிலான பகைமையைத் தேசிய இனங்களிடையிலான பகைமையாகக் காட்டும் நிர்ப்பந்தத்திற்கும் அது உள்ளாக நேரிடுகிறது. சர்வதேச அரங்கிற் தன்னை ஏகாதிபத்திய வாதிகளின் கையில் ஒரு பகடைக் காயாக்கும் நிலைக்கும் அதன் குறுகிய உலக நோக்கே காரணமாகிறது.

மாக்ஸியவாதிகளின் நிலைப்பாடோ தேசியப் பிரச்சினையை வர்க்க முரண்பாட்டின் ஒரு அம்சமாக கருதுவது, எனவே அது தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் உள்ள முரண்பாடுகளைப் பிரதான முரண்பாடு, இரண்டாம் மூன்றாம் பட்ச முரண்பாடுகள் என்ற விதமாக அடையாளங் காண்கிறது. முரண்பாடுகளின் முக்கியத்துவத்தை நீண்டகாலக் கண்ணோட் டத்திலும் குறுகிய காலக் கண்ணோட்டத்திலும் வேறுபடுத்தி ஆராய்கிறது. ரஷ்யப் புரட்சியின் பாடங்களைச் சீனாவில் நேரடியாகப் பாவிக்க முடியாமற் போனமையும் சீனப் புரட்சியின் அனுபவங்கள் அப்படியே வியட்னாமியப் புரட்சியிலும் விடுதலைப் போரிலும் பயன்படாமையும் நமக்கு உணர்த்துவது என்ன?

பிரிந்துபோகும் உரிமையின் அங்கீகாரம் பிரிவினையை ஊக்குவிக்கும் நோக்கை உடையதல்ல. மாறாக அது ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் சுயவிருப்பின் பேரில் ஒன்றாக வாழும் வாய்ப்பைப் பலப்படுத்தும் நோக்கையுடையது. இதன் காரணமாகவே சுயநிர்ணய உரிமை என்பது பிரிவினையே என்று கூறுவோர் சுயநிர்ணய உரிமை என்றதன் கருத்தைத் திரிக்கிறார்கள். அதாவது ஒன்றைச் செய்யும் உரிமையை அதைச் செய்யும் நிர்ப்பந்தமாக மாற்றுகிறார்கள். இது லெனினுடைய அடிப்படையான நோக்கத் திற்கு எதிராக லெனினின் சொற்களையே திரித்துப் பயன்படுத்தும் முயற்சி.

சுயநிர்ணயம் என்பது பிரிந்துபோகும் உரிமை தொடர்பானதாகக் கருதப் பட்டுத் தேசங்களின் சயு நிர்ணய உரிமை பற்றிய வாதம் பிரிவினைக்கான உரிமை தொடர்பான விவாதமாக இருந்த நிலையைக் கடந்து விட்டோம். தேசிய இனங்களின் பிரச்சனை, முக்கியமாகத் தேசிய அரசாக அமையும் வாய்ப்பில்லாத தேசிய இனங்களின் பிரச்சனை, இன்று மேலும் கவனமான பரிசீலனையை வேண்டி நிற்கிறது. சுய நிர்ணயம் என்பதன் அர்த்தம் ஒரு தேசம் பிரிந்துபோகும் உரிமையை எந்த நிலையிலும் மறுக்காத விதமாக மேலும் விரிவுபடுத்தபட வேண்டிய தேவையை நாம் எதிர்நோக்குகிறோம். தேசிய இனம் என்ற பதத்தின் பொருளை மேலும் விரிவுபடுத்த வேண்டிய தேவையும் ஏற்படுகிறது. தேசிய இனங்களாக அடையாளங்காண முடியாத ஒடுக்கப்பட்ட சமுதாய பிரிவுகளது உரிமைகள் தொடர்பாகவும் தெளிவான கருத்துக்கள் அவசியமாகின்றன.

ஒரு தேசிய இனம் ஒரு தேசமாக அல்ல தேசிய அரசாக அமைவதற்குச் சில நடைமுறைச் சாத்தியமான தேவைகள் உள்ளன. அதற்குரிய ஒரு தொடர்ச்சியான பிரதேசம் ஒரு முக்கியமான தேவை. இது எப்போதுமே இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததில்லை.

தேசிய இனப்பிரச்சனை தொடர்பான கொள்கைகள் ஆதிவாதிகள், நாடோடிகள் போன்ற சமுதாயப் பிரிவினரைப் போதிய கணிப்பிலெடுக்கத் தவறியதன் காரணமாக இம் மக்களது உரிமைகள் நாளாந்தம் பறிக்கப்பட்டு வருகின்றன. இலங்கையின் வேடர் சமுதாயத்தின் பிரச்சனையோ நாடோடி களின் நிலைமையோ தேசிய இனப்பிரச்சினையின் ஒரு பகுதியாகவேனும் இதுவரை கருதப்படாமை கவனிக்கத்தக்கது.

ஒரு மக்கள் பிரிவு தேசிய இனமாகவோ அடையாளங் காணப்பட்டால் அதற்குச் சுய நிர்ணய உரிமை உண்டு. சுயநிர்ணய உரிமை என்றாற் பிரிந்துபோகும் உரிமை. பிரிந்துபோகும் உரிமையைப் பிரயோகிக்கும் வசதி இல்லாத ஒரு மக்கள் பிரிவுக்குச் சுய நிர்ணயத்தை அதன் முழுமையான அர்த்தத்தில் அனுபவிக்க முடியாது. இது உண்மை. அதனால் அவர்கட்குத் தம் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் உரிமையே இல்லை என்றாகிவிடுமா? அக் காரணத்தால் அவர்கள் தேசிய இனமாக இல்லாது போய்விடுவார்களா?

கடந்த இருபது வருடங்களாக தேசிய இனப்பிரச்சனை அநேக முக்கிய மாறுதல்களுக்கு ஆளாகியிருக்கிறது. இரண்டாவது அகிலத்தின் காலத்திய தேசிய இனப் பிரச்சனையும், லெனினிய காலத்திய தேசிய இனப் பிரச்சனையும் ஒன்றே அல்ல. பரிமாணத்தில் மட்டுமல்லாமல், அவற்றின் உள் தன்மையிலும் அவை தீர்க்கமாக வேறுபட்டுள்ளன.

ஒடுக்கப்பட்ட தேசங்களின் தேச விடுதலை இயக்கங்கள் எப்படிப்பட்ட தன்மை வாய்ந்தவை என்பதைச், வரன்முறை ஜனநாயகத்தின் கண்கொண்டு சீர்தூக்கி ஆராயக் கூடாது. மாறாக, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் பொதுவான லாப நஷ்டக் கணக்குப் பட்டியல் காட்டுகிறபடி அவை என்ன

விளைவுகளை நடைமுறையில் உண்டுபண்ணியிருக்கின்றன என்பதைக் கொண்டு தான் சீர்தூக்கி ஆராய வேண்டும்; அதாவது ‘‘தனிமை நிலையில் நிறுத்திப் பார்க்காமல், உலக ரீதியில்’’ சீர்தூக்கி ஆராய வேண்டும் என்று லெனின் சரியாகக் குறிப்பிட்டுள்ளார்.

**பலஸ்தீனம்: நல்லதொரு நிகழ் உதாரணம்**

உலகில் மிக நீண்டகாலமாக அடக்குமுறைக்கு ஆட்பட்டிருக்கும் சமூகமாக பலஸ்தீன சமூகம் இருந்துவருகின்றது. பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புக் கள், பொருள் இழப்புக்கள், நிலப்பறிப்புக்கள் போன்ற பலவற்றையும் தாண்டி இஸ்ரேலிய ஒடுக்குமுறைக்குகெதிராகவும் சியோனிச சண்டித்தனத்திற் கெதிராகவும் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக பலஸ்தீன மக்கள் போராடி வருகிறார்கள். இஸ்ரேலின் படுகொலைகளும் தொடர்ச்சியான கொலை வெறித் தாக்குதல்களும் பலஸ்தீன மக்களின் மனவுரனைப் பாதிக்கவில்லை. ஒடுக்குமுறைக் கெதிரான போராட்டத்தில் சகலவிதமான போராட்டக் கருவிகளையும் அவர்கள் கையிலெடுக்கிறார்கள். உலகெங்கும் அடக்கு முறைக்கெதிராக போராடும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரமூட்டுகிறார்கள்.

பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டம் அரபு மக்களின் விடுதலை யின் முக்கியமான ஒரு குறியீடாக உள்ளது. பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டம் உலகின் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்குகிற ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கு எதிரான பிரதான சவாலாகவும் இருக்கிறது. ஆனால், அதை அரபு மக்களுக்கும் முஸ்லிம்கட்கும் மட்டுமே உரியதாகக் கொள்ளக் கூடாது. ஏனெனில், அது உலகளாவிய ரீதியில் ஏகாதிபத்திய ஒடுக்குமுறை, தேசிய ஒடுக்குமுறை, இனவாதம், ∴பாஸிஸ அடக்குமுறை போன்ற பல்வேறு கொடுமைகட்கும் எதிரான போராட்டங்களின் பொதுவான குறியீடாகும்.

இதுவரை பலஸ்தீன மண்ணில் இஸ்ரேல் விளைவித்த சேதங்கட்கு நிவாரணமோ, நட்ட ஈடோ பற்றி இதுவரை எதுவுமே பேசப்படவில்லை இனியும் எதுவுமே பேசப்பட மாட்டாது. இஸ்ரேலின் பாதுகாப்பு என்கிற பேரில் மத்திய கிழக்கில் தனது குறுக்கீட்டை வலுப்படுத்துகிற அமெரிக்காவின் உண்மையான நோக்கங்கள் மத்திய கிழக்கின் எண்ணெய் வளம் தொடர்பானது. இந்த இடத்தில் தான் பலஸ்தீன மக்களைப் பற்றிய “சர்வ தேச’’ அக்கறை நமக்கு சில பாடங்களைக் கற்பிக்கிறது. அவை மிகவும் முக்கியமான பாடங்கள். ஒடுக்குபவனும் ஒடுக்கப்படுபவனும் இருக்கின்ற சூழலில் யாருடைய ஆதரவு எமக்கு தேவை என்பது பற்றிய தெளிவு இருக்க வேண்டும். அமெரிக்காவையும் இந்தியாவையும் நம்பினால் எல்லாம் கிடைக்கும் என்று நம்புகிறவர்களும் மற்றவரை நம்பப் பண்ணுகிற வர்களும் இருக்கிறார்கள். நம்புகிறவர்களை விட நம்பச் சொல்லுகிறவர்கள் ஆபத்தான வர்கள். அவர்கள் தங்கள் சுயலாபம் கருதியே அப்படிச் சொல்லுகிறார்கள்.

இஸ்ரேலின் ”தற்காப்புக்கான உரிமையை” எப்போதோ ஏற்றுக்கொண்ட ஒபாமா, இஸ்ரேல் பலஸ்தீன மக்களின் மீது நடத்திய வெறியாட்டத்தைக் கண்டிக்க மறுத்து அதை நியாயப்படுத்தியவர். அத்துடன் காஸா மீதான பொருளாதார தடையைப் பற்றி வாயே திறக்காதவர் என்பதையும் மறக்க லாகாது. ஒபாமா ஆட்சி ஈராக்கிலிருந்து படைகளை விலக்கிக்கொள்ள இருப்பது, அந்த நாட்டின் மீதான ஆக்கிரமிப்புத் தவறானது என்பதனால் அல்ல. இயலாமையாலேயே. அண்மையில் ஒரு நேர்காணலில் அமெரிக்க முன்னாள் சட்டமா அதிபர் ராம்சே கிளார்க் சொன்ன ஒரு விடயம் முக்கிய மானது. ‘‘பயங்கரவாதத்திற்கு எதிரானது என நடத்தப்படுகிற போர் உண்மையில் இஸ்லாத்திற்கு எதிரான போராகும், பெரும்பாலான அரசியல் தலைவர்கள் இஸ்லாமிய பயங்கரவாதத்தை எதிர்ப்பதாகப் பறைசாற்றிக் கொண்டாலும் உண்மையில் இஸ்லாத்தை முற்றுமாக துடைத்தெறிந்து விடுவதே அவர்களது உண்மையான நோக்க மாகும். அமெரிக்க அரசாங்கம் எப்போதும் ஒரு எதிரியைச் சுற்றியே செயற் படக்கூடியது. தனது செயல் திட்டங்களின் உண்மையான நோக்கத்தை மூடி மறைக்கவும், அமெரிக்க மக்களை ஒருங்கிணைக்கவும் அமெரிக்கா ஒரு புதிய எதிரியை தேடிக் கொண்டிருக்கிறது. தேசப்பற்றை போற்றுவது அதன் உண்மையான நோக்கமன்று. பிறர் மீது மேலாதிக்கம் செலுத்துவதும், பிறரது வளங்களை அபகரிப்பதும்தான் அதனுடைய உண்மையான நோக்கம். அதே வேளை, அவற்றை யாரும் இனங்கண்டுகொள்ளாமல் இருக்க எதிரியை வேட்டையாடு வதாக வெளிவேடம் போடுகிறது. இங்குதான் அமெரிக்க இராணுவம் தனது முழுமையான பங்களிப்பை செய்கிறது.”

இன்று இஸ்ரேலின் கொடுமையைக் கண்டிக்கவும் இஸ்ரேலைத் தனிமைப் படுத்தவும் மூன்றாம் உலக நாடுகளிலிருந்தும் விடுதலை போராட்ட அமைப்புக்களில் இருந்தும் மக்கள் இயக்கங்களில் இருந்தும் உரத்த குரல்கள் எழுமானால், அவை இஸ்ரேலின் எசமானனும் அடக்குமுறை ஆட்சிகள் பலவற்றின் ஆதரவுச் சக்தியாகவும் உள்ள அமெரிக்காவையும் தாக்கும். அதை விடுத்து இஸ்ரேல் போன்ற ஒரு நாடு பற்றிய கனவில் மூழ்கி இருப்பதும் அக கனவை வெற்று நம்பிக்கையாக வளர்ப்பதும் மக்களுக்கு இழைக்கின்ற துரோகமாகும்.

இஸ்ரேலின் கொடுமைகளை எதிர்க்கத் தவறுபவர்கள் உலகில் நடக்கிற எந்தக் கொடுமையையும் ஆதரிக்கக்கூடியவர்கள் என்பதை நாம் மறக்க லாகாது. உள்ளபடி சொல்வதென்றால், மனசாட்சியையும், நீதியையும் கொன்றவர்களால் தான் இஸ்ரேலுக்கு ஆதரவாக பேசவோ, எழுதவோ முடியும். இங்கே சொல்ல வேண்டிய இன்னொரு மிக முக்கியமான செய்தி ஒன்றும் பொதிந்துள்ளது. இஸ்ரேலிய அரசு நடத்துகிற கொடுமைகட்கு எதிரான குரல்கள் எப்போதுமே இஸ்ரேலுக்குள்ளிருந்து எழுந்து வந்துள்ளன. எனினும், சரிக்கும் பிழைக்கும், நியாயத்திற்கும் அநியாயத்திற்கும் வேறுபாடு தெரியாத ஒரு சமூகமாக இஸ்ரேல் சீரழிந்து வந்துள்ளது. பலஸ்தீன

மக்களுடைய உரிமைகள் முற்றாக வழங்கப்படாத வரை இஸ்ரேலுக்கு அமைதியோ, பாதுகாப்போ இல்லை என்பதை இஸ்ரேலிய மக்கள் புரிந்து கொள்ளத் தவறுகிறார்கள். ஒரு சமுகம் பலஸ்தீன பயங்கர வாதம் என்று இஸ்ரேல் அரசு சொல்லுகிற காரணத்தை கேள்வியின்றி ஏற்றுக்கொண்டதன் விளைவுதான் இது என்பதை சுட்டியாக வேண்டும். இப்போதெல்லாம் இஸ்ரேலியப் படையினர் செய்கிற எதற்கும் நியாயம் தேவையில்லை என்றாகிவிட்டது.

இஸ்ரேலின் இன்றைய அப்பட்டமான இனவெறிப் போக்கு வலுப்பெற்று, நாட்டின் ஆதிக்கச் சிந்தனையாவதற்கு எவ்வாறு அரசியற் கட்சிகளும் ஊடகங்களும் உதவின என்பதற்கும் மேலாக, இப்போக்கு எப்படி இஸ்ரேலிய சமுதாயத்தைச் சனநாயகமற்ற ஒன்றாகச் சீரழித்துள்ளது என்பது இங்கே கவனிக்கப்பட வேண்டியது. இதன் பலாபலன்களையும் தீமை களையும் மௌனம் காக்கும் இஸ்ரேலிய மக்களே அனுபவிப்பர். எனவே எந்தவொரு ஆதிக்க மனப்போக்கிற்கும் எதிராகப் போராட வேண்டியது மக்களின் கடமை. அதை மக்கள் தாமாகவே செய்யத் தவறுவார்கள் எனில் துன்பம் வந்து சேரும். வரலாற்றை மக்களே உருவாக்குகின்றனர் என்பதன் உண்மையை நாம் மறக்கிறபோது, தனி மனித ஆளுமைகள் மீது மிகையாக நம்பிக்கை வைத்து சமூகப் பொறுப்புக்களைக் குறிப்பிட்ட சிலரது கைகளில் விட்டு விட்டு ஒதுங்கிக் கொள்ளுகிறோம். இது மிகுந்த ஆபத்தானது என்பதற்கு இஸ்ரேலிய சமுகம் ஒரு சான்று. அந்நியர் மீது வைக்கின்ற நம்பிக்கைகள் அவர்களது நலன் சார்ந்ததாகவே இருக்க முடியுமே தவிர எங்களது நலன் சார்ந்ததாக இருக்க முடியாது என்பதற்குப் பலஸ்தீன சமுகம் ஒரு சான்று. ஒடுக்கப்பட்ட மக்களுக்கான ஆதரவானது மக்க ளாலேயே வழங்கப்பட முடியும் என்ற உண்மை உறைக்க வேண்டும் இல்லாவிடில் போராட்டம் திசை தவறுவது தவிர்க்க முடியாதது.

**தமிழ்த் தேசியவாத அரசியலின் திசைவழிகள்**

தமிழ்த் தேசியவாதம் தமிழ் மக்களை எத்தகைய ஒரு அவலநிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது என்பதை நாம் இன்று கண்கூடாகப் பார்க்கின்றோம். இந்த அவலத்திற்குப் பொறுப்புச்சொல்ல வேண்டியவர்கள் தமிழ்த் தேசிய வாதத் தலைமைகளும் தமிழ்த் தேசியவாதிகளுமே. ஆனால் இன்றும் தங்கள் சந்தர்ப்பவாத அரசியலைத் தொடர்வது பற்றியே இவர்கள் அக்கறையாய் இருக்கிறார்கள். இவர்கள் முகாம்களின் வேலிகளுக்குப் பின்னால் இருந்து இன்றும் அல்லல்படும் மக்கள் பற்றியோ நடந்து முடிந்த பேரழிவு பற்றியோ எதுவித அக்கறையுமற்றுப் புதிய மாயைகளை, கனவு களை, வெற்று நம்பிக்கைகளை மக்கள் மத்தியில் ஊட்டும் சீரழிவுச் செயற்பாடுகளில் இறங்கியிருக்கிறார்கள்.

விடுதலை என்பது அறஞ்சார்ந்த ஒரு பிரச்சனையுமாகும். அது யாருடைய அறம் எத்தகைய அறம் என்பன பற்றிய கேள்விகள் எப்போதுமே உள்ளன.

இதை மக்களாகிய நாம் விளங்கிக்கொள்ள வேண்டும் இல்லாவிடில் தமிழ்த் தேசியவாதம் தமிழ் மக்களை இன்னொரு அவலத்தில் தள்ளிவிடும். தனது இருப்பையன்றி வேறு எதைப்பற்றியும் அக்கறை செலுத்தாத, மக்கள் மீது நம்பிக்கை வைக்காத தமிழ்த் தேசியவாதத்தால் வேறெதையுஞ் செய்ய இயலாது. இதைக் கடந்த நான்கு தசாப்தகால தமிழ்த் தேசியவாத அரசியல் எமக்குத் தெளிவாகக் காட்டியுள்ளது. தமிழ் மக்களால் தனித்துநின்று போராட இயலாது. எனவே, அந்நிய அரசுகளின் ஆதரவு தேவை என்று வாதிப்போர் பழைய பிழைகளையே திரும்பும் செயுமாறு தூண்டுகிற காரியத்தையே திரும்பத் திரும்பச் செய்கிறார்கள். அவர்களின் நோக்கம் சுயநலன் சார்ந்தது மட்டுமன்றி மக்கள் விரோதமானதும் கூட. அந்நிய ஆதரவு என்பது ஒரு ஒடுக்கப்பட்ட சமூகம் அந்நிய அரசுகளிடமிருந்து எதிர்பார்க்கக்கூடியதல்ல. அரசுகளிடையே நடக்கிற காநகர்த்தல்களை ஒரு விடுதலை இயக்கமோ ஒடுக்கப்பட்ட சமூகமோ தீர்மானிக்க முடியாது. எங்கள் அனுபவங்களிலிருந்து நாங்கள் கற்றவை அனைத்தையுமே மறுக்கிற விதமாக எங்கள் தலைமைகளது அரசியல் நடத்தை அமைகிறது. இது மிகவும் ஆபத்தானது. இது குறித்து நாம் அவதானமாக இருக்க வேண்டும். இல்லாவிடின் அதற்கான பலன்களை அனுபவிக்கப்போவது மக்களே அன்றி வித்தைகாட்டுகின்ற தமிழ்த்தேசியவாதத் தலைமைகள் அல்ல.

**நிறைவாக**

நாம் எமது வரலாற்றிலிருந்து நிறையக் கற்றிருக்கிறோம். எமக்கு வழங்கப் பட்ட வெற்று வாக்குறுதிகள், நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் இன்னமும் அப்படியே எம்மைச் சூழ்ந்திருக்கின்றன. வடிவங்களும் பாத்திரங்களும் பாத்திரங்களை ஏற்பவர்களும் மட்டும் மாறியிருக்கின்றன. வேறெதுவும் மாற வில்லை. வராத கப்பலிலிருந்து, எதையும் பெற்றுத் தராத அண்டைத் தேசம் வரை எல்லாவற்றையும் பார்த்தாகிற்று. மக்கள் தங்கள் விடுதலையை தங்கள் தோள்களில் ஏற்றுச் சுமக்கும்வரை பேச்சுக்களும் வெற்றுக் கோஷங்களும் தொடர்ந்து கொண்டே இருக்கும். அவர்கள் தொடர்ந்தும் மக்களின் பேரால் மக்களையே ஏய்ப்பர்.

*****

# விரக்தி அடையாதீர்

## சார்லி சப்லின்

*நாம் வேகத்தை வளர்த்துள்ளோம்*
*ஆனால் நம்மை உள்ளே அடைத்துள்ளோம்:*
*பெருவளம் கொழிக்கும் இயந்திரங்கள்*
*நம்மைப் போதாமையில் விட்டுள்ளன.*
*நம்மை நமது அறிவு வெறுப்புடையோராக்கியுள்ளது,*
*நமது கெட்டித்தனம் கடுமையானோராயும்*
*இரக்கமற்றோராயும் ஆக்கியுள்ளது.*
*மிக அதிகம் சிந்திக்கிறோம் மிகச் சிறிதே உணருகிறோம்.*
*இயந்திரங்களிலும் மேலாக நமக்குத் தேவையானது*
*மனிதத்தன்மை,*
*கெட்டித்தனத்தினும் மேலாக நமக்குத் தேவையானவை*
*இரக்கமும் மென்மையும்.*
*இப் பண்புகளின்றி வாழ்க்கை வன்முறையானதாகும்*
*யாவும் இழக்கப்பட்டுவிடும்.*
*ஆகாய விமானமும் வானொலியும் நம்மை நெருக்கமாக்கி*
*யுள்ளன. இக் கண்டுபிடிப்புக்களின் இயல்பே, மனிதனிடம்*
*நற்பண்பைக் கேட்டலறுகிறது, நம் அனைவரதும் ஒற்றுமைக் காகச்*
*சர்வதேசச் சகோதரத்துவத்தைக் கேட்டலறுகிறது. இப்போதும் எனது*
*குரல் உலகின் கோடிக்கணக்கானோரை, அப்பாவிகளை மனிதர்*
*வதைத்துச் சிறையிலிடும் ஒரு அமைப்பிற்குப் பலியாகி விரக்தியின்*
*விளிம்பிலுள்ள ஆண்களையும் பெண்களையும் சிறு*
*குழந்தைகளையும் எட்டுகிறது. நான் சொல்வதைக்*
*கேட்கக்கூடியோருக்கு நான் சொல்கிறேன்: "விரக்தி அடையாதீர்".*

*(நன்கறியப்பட்ட நகைச்சுவை நடிகரும் முற்போக்குச் சிந்தனையாளருமான சார்லி சப்லின் (Charlie Chaplin) தயாரித்து வழங்கிய மகா சர்வாதிகாரி (the Great Dictator) எனும் படத்திலிருந்து. இப் படம் ஹிற்லர் அதிகாரத்தின் உச்சத்திலிருந்தபோது தயாரிக்கப்பட்டது.)*

**புதிய-ஜனநாயக மாக்சிய-லெனினிசக் கட்சிக்கு நிதி உதவ விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்கிற்கு வழங்கி உதவலாம்.**

***K. Senthivel அல்லது V. Mahendran, Account Number 1570018335 Commercial Bank, Grandpass Branch, Colombo 14, Sri Lanka***